# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 30-11-47 | இதழ் 27


## புரட்சிக்கு வித்து!

[ கடலூர் சு. வ. தியாகராசன். ]

இலக்கியத்தின் சுவடுமிலா, உவந்து கற்க
எழில்நயமோர் சிறிதுமிலா, இகல்வின் ஞானக்
கலைநுட்பம் அணுவுமிலா, பண்படாத,
கற்பதற்கும் எளிதில்லா, காலம் வென்ற
வளங்கொழிக்கும் தமிழின்பம் நுகர்ந்த யார்க்கும்
நலமேதும் தரஇயலா, நந்தாய் நாட்டு
நிலப்பரப்பி லெங்கணுஞ்செந் தமிழோ டொன்றி
நிலவுதற்குந் தகுதியிலா 'இந்தி' தன்னை.

முன்னொருகால் கட்டாய பாட மாக்க
முனைந்திட்ட ஆட்சியினரின் சூழ்ச்சி வீழ
தன்மானத் தமிழ்மக்கள் ஆர்த்தெழுந்தார்
திரள்திரளாய் கிளர்ச்சிசெய்து சிறைமேற்-
கொண்டார்

வன்னெஞ்சக் கட்டாயக் கொடுமைக் கஞ்சா
வீரமிகு இருஇளைஞர் 'பலி'யும் ஆனார்
எந்நாடும் எந்நாளும் கண்டிராத
எழுச்சிகொண் (டு)இந்தியினை எதிர்த்தே வென்றார்.

பள்ளியில்விட் டுந்தமிழை முதலிடம் ஆக்காது
பாராள ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்டே
தெள்ளுதமிழ் மொழிக்குயர்வு தந்தோ மென்பார்
தீமைதரும் அயல்மொழிக் கேவல் செய்வோர்
மெள்ள இன்று 'இந்தி' யினைப் புகுத்தும் ஆட்சி
மன்றத்தீர்! ஒன்றுரைப்பேன், இதுவே நாளை
துள்ளுசிறார் முதல்எல்லாத் தமிழர் ஒன்றாய்த்
துடித்தெழுந்து புரட்சிசெய்ய வித்தாம் கண்டீர்!

## கல்விமுறை எப்படி

15-ம் பக்கத் தொடர்ச்சி

பக் கல்வி பெரும்பாலும் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே இருத்தல் அவசியம்.

மத்திய தரத்தில் வெறும் படிப்பு முறையுள்ள பள்ளிக்கூடங்களும், பல திறப்பட்ட தொழில் பள்ளிக்கூடங்களும் வெவ்வேறாக இருத்தல் வேண்டும். இந்தத் தொழிற் கல்விச் சாலைகள் அந்தந்த இடத்துக்குத் தக்கவாறு தொழில்களைக் கற்பித்து வரவேண்டும். முடியுமானால், ஆரம்பக் கல்வி முடிந்ததும், மாணவர்களுடைய மனோ நிலையைப் பரிசோதனை செய்து, அவர்கள் பின்பற்ற வேண்டிய கல்வி முறையைக் குறித்து ஆலோசனை கூறச் செய்யலாம். கைத்தொழிற் கலாசாலைகளில், புத்தி சாதுரிய அபிவிருத்திக் கல்வியை முற்றும் புறக்கணித்து விடக் கூடாது. விஞ்ஞானம், சரித்திரம், பூமிசாஸ்திரம், பிரஜாவுரிமை தத்துவம் முதலிய பல விஷயங்களையும் கற்பிக்க ஒரு குறிப்பிட்ட கால அளவை ஒதுக்கி, ஆங்கிலம் ஒரு பாஷையென்ற அளவில் அதன் மூல தத்துவத்தையும் கற்பித்தல் அவசியம். புத்தியுள்ள விவசாயிகள், தொழிலாளிகள் முதலிய அனைவரும் இந்தப் படிப்பை அடைந்திருக்க வேண்டியது அவசியம்; ஆகவே அனைவரும் இம்முறையைப் பின்பற்றுவார்கள் என நம்புகிறேன்.

உயர்தர வகுப்பில் இந்தவித்தியாசம் இன்னும் அதிகரிக்கப்படவேண்டும். பொதுவான அறிவு வளர்ச்சிக் கல்வியும், பல திறப்பட்ட பகுதிகளில் விசேஷத் திறமையளிக்கும் கல்வியும் இங்கு கற்பிக்கவேண்டும். ஆங்கிலத்தின் விரிவான, நடைமுறையில் உபயோகத்துக்குத் தக்க பயிற்சியும் இங்கு அளிக்கவேண்டும். இந்தப் படியைத் தாண்டும் மாணவர்கள் அதிக அறிவு பெற்றவர்களாக, மக்களிடையே கருதத் தக்கவாறு இக்கல்வி ஒழுங்குபட வேண்டும். இந்த அளவு பயிற்சி பெற்றவர்களிடையிருந்தே ஆசிரியர்களைப் பொறுக்க வேண்டும். ஆனால் ஆரம்பப்பள்ளிக்கூட ஆசிரியர்கள் நடுத்தரக் கல்வி முடித்துப் பின் இரண்டு வருஷம் போதனாமுறைப் பயிற்சிபெற்றவர்களாயிருந்தால் போதும். இந்தப்படி தாண்டியவர்கள் வைத்தியம், எஞ்சினீயரிங் முதலிய தனிப்பட்ட உயர்தரக் கல்விக்குச் செல்ல லாயக்குடையவர்களாக இருத்தல் வேண்டும்.

பழக்கத்திலிருந்து வரும் பல அபிப்பிராயங்களையும் சமூக ஒழுக்கத்தையும் தற்காலக் கல்வியானது மாற்றி வருகின்றது; இது தற்காலக் கல்வியால் ஏற்படும் தீமையென்று சொல்வோர் இதைத்தெய்வ நம்பிக்கையற்ற கல்வியென்று சொல்வதுடன், கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் மதபோதனை மிக இன்றியமையாத தென்றும் வற்புறுத்கின்றனர். நம் நாட்டில் ஆங்கிலக் கல்வி புகு முன்னர், ஒவ்வொரு குழந்தையும் அதன் மதத்தைத்தவிர வேறொன்றையும் கல்லாது இருந்திருந்தால், இங்கு வியாபாரம் செய்வதற்காக வந்த ஒருசில அந்நியர் கைக்குள் இந்தியா எளிதாக விழத்தக்க நிலைக்கு எவ்வாறு வந்தது என இந்த 'மதபோதனை' க்காரர்களிடம் கேட்கலாம். சுய அறிவும், கற்பனா சக்தியும் அமுக்கப்பட்டு, மக்கள் அனைவரும் அறியாமையில் ஆழ்ந்து, பழையனவெல்லாம் தெய்வீகமானது என்ற நம்பிக்கையுடன் புதிதாக ஒன்றையும் அறிய முடியாதிருந்ததால் அல்லவா இந்த நிலைமை ஏற்பட்டது? விதியென்ற எண்ணத்தால், எதிலும் சுய முயற்சியை ஈடுபடுத்த விடாமல், இந்தப்பழங்கொள்கைகள் மக்களை வலியுறுத்தவில்லையா? மதத்தால் அனுமதிக்கப்பட்ட பல்வேறு வகுப்புகளும், மிக அவசியமான சந்தர்ப்பத்திலும் ஒன்றுகூடி ஒத்துழைக்க முடியாதென்ற நம்பிக்கையை மக்கள் மனத்தில் ஆணியடிக்க வில்லையா? மதக் கொள்கை யென்பது, வெறும் சாரமற்ற சடங்குகளை அனுஷ்டிப்பது மட்டுமே என்ற கீழ் நிலை அடையவில்லையா? தங்கள் மனத்திற்குப் பிடிக்காத மாறுதலில் வெறுப்புக் கொண்டுதான், இந்தப் பழைமை விரும்பிகள், மத போதனைக் குறைவால் தீமைகள் ஏற்பட்டு விட்டதாகக் கூக்குரலிடுகிறார்கள். முன்னேக்க வேண்டியிருக்க, இவர்கள் எப்பொழுதும் பின்னேக்கியே செல்கின்றார்கள். எதிர்காலம் சீர்பெற வேண்டுவதற்கன்றோ உழைக்க வேண்டும்! சகல மதங்களுக்கும் அடிப்படையான தத்துவக் கருத்துக்களைப் பற்றி எதுவும் கூற நான் விரும்பவில்லை. ஆனால் இந்தத்தத்துவங்களைச் சிறுவர்கள் உணர்வது மிகக் கஷ்டம். ஆகவே மதபோதனை அர்த்தமற்ற சடங்காகவோ அல்லது எந்த விதமான பொருளுமில்லாத வெறும் வார்த்தைஉச்சாடனமாகவோ தான் முடியும். இளவயதில் அளிக்கப்படும் பயிற்சி சிறுவர் மனத்தை விசாலப்படுத்த என்னவெல்லாம் அவசியமோ அதை யெல்லாம் செய்யத்தக்கதாகஇருக்கவேண்டும். மதக் கல்வி அவசியமென வற்புறுத்தினால் நமது வகுப்பு வித்தியாசங்களையே அது அதிகப்படுத்தும்.

—✲—

மதிப்புரை

## "செய்யாத குற்றத்திற்கு ஜென்ம தண்டனை"

விலை ரூபாய் **2—0—0** கிடைக்கு மிடம்:—

சுதந்திர புத்தகசாலை, 94, அரண்மனைக் காரத்தெரு, சென்னை—1-

இந்நூலின் ஆசிரியர் பண்டிதர் S. S. அருணகிரிநாதர் அவர்கள், தமிழ் நாட்டாரின் அன்பையும் ஆதரவையும் ஏற்கனவே அமோகமாகப் பெற்றுள்ள[illegible] அறுபதுக்கு அதிகமான நூற்களை இ[illegible] பேனா சிருஷ்டித்துள்ளது.

மேற் குறித்த நூலில், குற்றம் பு[illegible] தவன் தண்டனை அடையாமல் சில [illegible] தப்பி இருப்பதும், நிரபராதி ஆரம்பத்தி[illegible] தண்டனை அடைவதும், பின்னர் உண்[illegible] வெளியாகி விடுதலை அடைவதும், நல்[illegible] கற்பனா ரசனையுடன் எழுதப்பட்டிருக்[illegible] றது. விழுமியகருத்தைத் தக்க முறை[illegible] யில் கோவையாக்கி, எளியதமிழில் இ[illegible] நூல் தரப்பட்டுள்ளது.

"பொழுது போக்குக்காகப் படித்தெ[illegible] யக் கூடிய புத்தகங்களில் இதுவும் ஒ[illegible] றல்ல. இது, புது முறையில் எழுதப்ப[illegible] டது. இதுபோன்ற ஒரு புத்தகம், என[illegible] குத் தெரிந்த வரையில், தமிழில் வெ[illegible] வரவில்லை. இது, படிப்பவர்களி[illegible] மனதை இழுப்பது மட்டுமல்ல; பு[illegible] எண்ணம், புதிய கருத்து முதலியவைக[illegible] யும் எழுப்ப வல்லது" என ஆசிரியர் த[illegible] எழுதிய முன்னுரையிலேயே கூறியுள்[illegible] முற்றிலும் உண்மையாகும். இதுபோன்[illegible] நூற்கள் பலவற்றைத் தமிழர்களுக்கு[illegible] தந்துதவ வேண்டுமென விரும்புவ[illegible] இந்நூலைத் தமிழர்களுக்குச் சிபார்சு செ[illegible] கிறோம்.

சென்றவாரத் தொடர்ச்சி

# ★ ஆசிரியர் சிந்தனைக்கும் மாணவர் விழிப்புக்கும் ★

[நக்கீரன்]

இன்றையமாணவர்கள்சிந்தனையை அடக்கியே சும்மா இருக்கின்றதிறம் அரிது காண் என்பதற்கு மாறாகச், சிந்தனையைக் கிளறியே நொந்துபோன வாழ்வைச் செம்மைப்படுத்துகின்ற திறமே பெரிதுகாண் என்ற அளவுக்குத் தங்கள் அறிவைப் பண்படுத்திக்கொள்ளும் நிலைமையில் உள்ளனர் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

இனிச், சிவவேதியரால் கொண்டுவரப்பட்டஅடிமைஓலையில், திருவெண்ணெய் நல்லூர்ப் பார்ப்பனர் சிலர் சாட்சிக் கையெழுத்திட்டிருந்தனரென்றும், அக்கையெழுத்துக்கள் தங்களுடையனவே என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர் என்றும் கூறப்படும் அண்டப்புளுகை அறிவுப்பாதையில் செல்லும் மாணவர்களால் நம்ப முடியுமா? ஆரூரரை அடிமை கொள்வதற்காகப் பார்ப்பன வடிவத்தில் வந்தசிவனால் காண்பிக்கப்பட்ட அடிமை ஓலை, உண்மையாகவே ஆரூரரின் பாட்டனால் எழுதிக் கொடுக்கப்பட்டஓலை அல்லவென்பதும், அது, ஆரூரரை அடிமை கொள்வதற்காக அந்த வேதியரால் காட்டப்பெற்ற ஒரு பொய் ஓலை என்பதும் கதையின் போக்கால் புலனாகின்றது. எனவே, ஒரு பொய் ஓலையில் காணப்படும் கையெழுத்துக்களும் பொய்க்கையெழுத்துக்களாகுமேயன்றி, அவைஒருபோதும் உண்மைக் கையெழுத்துக்களாகா. அன்றியும், அடிமை ஓலை கொண்டுவந்த வேதியரைத் திருவெண்ணெய் நல்லூரிலிருந்த பார்ப்பனர் எவரும் அதற்கு முன் பார்த்ததில்லையென்றும், அதனாலேயே, அவர்கள், அந்த வேதியரை நோக்கி "நீர் எங்கிருப்பவர்?" என்று கேட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இங்ஙனம் முன்பின் அறியாத ஒருவரால் கொண்டுவரப்பட்ட அடிமை ஓலையில், சாட்சிகளாகக் கையெழுத்திட்டவர்கள், தங்கள் கையெழுத்தென்றே ஒப்புக்கொண்டனர் என்று கூறப்படுவதை, முதலாவது இரண்டாவது வகுப்பில் படிக்கும் மாணவன் கூட நம்பமாட்டான் என்றால், பத்தாவது பதினொராவது வகுப்புகளில்படிக்கும் அறிவுவளர்ச்சியடைந்த மாணவர்கள் எப்படி நம்புவர்? அந்த அடிமை ஓலை, "எந்த இடத்தில்—எந்த ஆண்டில்—எந்தப் பதிவாளர் (Registrar) முன்னிலையில், ஆரூரன் திருவெண்ணெய் நல்லூர்ப்பித்தனுக்கு வழியடிமைசெய்ய ஒப்புக்கொண்டு எழுதப்பட்ட"தென்று கேட்பார்களே! அந்த ஓலையில் காணப்படும் சாட்சிக் கையெழுத்துக்கள், அவற்றை ஒப்புக் கொண்டவர்களின்உண்மைக் கையெழுத்துக்கள் என்றால், அவர்கள், அந்த வேதியரைஅறியாதவர்களாய், "நீர் எங்கிருப்பவர்" என்று கேட்டிருப்பார்களா? என்பதாக இன்றைய விழிப்படைந்த மாணவர்கள், தங்கள் ஆசிரியரைக் கேட்டால், அதற்கு அவர் என்ன விடையிறுப்பாரோ!

இனி, "அடிமை ஓலையைக் கொண்டுவந்து, ஆரூரருடன் வழக்காடியவர், ஆரூரரின் பாட்டனார் காலத்தில் இருந்து, அதனை எழுதி வாங்கியவரன்று; ஆரூரரின் பாட்டனார் போலவே அவரும் இறந்து விட்டார்; இறந்தவரின் வழிவந்த ஒருவரே ஆரூரருடன் வழக்காடினார்; எனவேதான், அந்த அடிமை ஓலையில் சாட்சிக் கையெழுத்திட்டவர்கள், ஓலைகாட்டிய வேதியரை அறியாதவர்களாய், 'நீர் எங்கிருப்பவர்?' என்று கேட்டனர்; இதில் என்ன தவறு" என்று எண்ணவும் இடமில்லையே! ஆனால், இங்கு பேசப்படும் வேதியர், ஆரூரரின் பாட்டனார் இருந்த காலத்தில் இருந்தவர் என்றும், அவரே இந்த அடிமை ஓலையை நேரில் எழுதி வாங்கினார் என்றுமே சேக்கிழார் கூறியுள்ளார்.

"அக்காலம் உன் தந்தை தன்
தந்தை ஆள் ஓலை ஈதால்"

என்பது சேக்கிழார் கூற்று. இதன் பொருள்:—அந்தக் காலத்தில் உன் பாட்டன் எனக்கு எழுதிக்கொடுத்த அடிமை ஓலை இது என்பதாகும். எனவே ஆரூரரின்பாட்டனார் காலத்தில் இருந்தவர்களும், அவரால் எழுதிக் கொடுக்கப்பட்ட அடிமை ஓலையில் சாட்சிக் கையெழுத்திட்டவர்களுமான திருவெண்ணெய் நல்லூர்ப் பார்ப்பனருக்கு, அடிமைஓலை எழுதி வாங்கியவரைத் தெரியவில்லை என்ற முறையில் கதையின்போக்கு அமையுமானால், அதனைஅறிவுடைய மாணவர்கள் அணுவளவேனும் ஏற்றுக் கொள்ளுவாரா என்பதனை ஆசிரிய அன்பர்கள், தங்கள் சிந்தனைக்குச் சிறிது வேலை கொடுத்துப் பார்க்க வேண்டும். இங்கு பேசப்படும் நிகழ்ச்சி, ஆரூரரை அடிமை கொள்வதற்காக ஆண்டவனால் கையாளப்பட்ட 'அருள் விளையாட்டே'யன்றி, உண்மையான நிகழ்ச்சியல்லவென்றபோதிலும், 'பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்' என்பதற்கிணங்க, ஒரு நிகழ்ச்சியும், அதனை உருவாக்கக் கையாளப்படும் முறைகளும்சிறிதளவாவது அறிவிற்கும் உலக வழக்கிற்கும் பொருந்தக் கூடியதாகவன்றோ அமைதல் வேண்டும். அதிலும், அறிவை வளர்க்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் பாடபுத்தகங்களில் அமைக்கும் நிகழ்ச்சிகள், எத்துணைக் கண்காணிப்போடு—சிறந்த அறிவாற்றல் உள்ளவர்களால் அமைக்கப்பட வேண்டுமென்பதனை, மாணவர்களோடு நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ளும் ஆசிரியர்கள் உணர்ந்து, அதனை அரசியலாருக்கு உணர்த்தவேண்டும். அன்றியும், பாடபுத்தகத் தேர்வுக்குழு (Text Book Committee) தங்களால் உடன்பாடளிக்கப்படும் பாடபுத்தகங்கள் எல்லாம், அவற்றைக் கற்கும் மாணவர்களுக்கு ஏற்புடையனவா என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து பணியாற்ற வேண்டும் என்பதனை அவர்கள் தங்கள் கடமையாகக் கொண்டாலன்றித், தங்கள் பணியில் பழுதில்லை என்று அவர்கள் வாளா இருந்துவிட முடியாது.

இனி, அந்த அடிமை ஓலையில் சாட்சிக் கையெழுத்திட்டவர்கள், அந்த ஓலையில் காணப்பட்ட கையெழுத்துக்கள் தங்களுடையனதான் என்று அந்த ஓலையைப் பார்த்த பின்னரே ஒப்புக் கொண்டார்கள் என்பதாகவும் சேக்கிழார் கூறுகின்றார். இதனை,

"மேல் எழுத்திட்டார்கள்,
ஆசிலா எழுத்தை நோக்கி
அவைபொக்கும் என்ற பின்
னர்................"

என்பதாகக் கூறியுள்ளார். ஒரு ஓலை

யில் காணப்பட்ட கையெழுத்துக்கள் தங்களுடையனவா, அல்லவா என்பதனை அறிய, அந்த ஓலையைப்பார்த்த பின்னரே ஒத்துக்கொள்ளுமளவுக்கு அவர்கள் அந்நிகழ்ச்சியை மறந்துவிட்டார்கள் போலும்! அதனாலேதான் அவர்கள், அந்த ஓலையைப் பார்த்தபின்னர், "இவைஎங்களுடைய கையெழுத்துக்கள்தான்" என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் போலும்! என்னேமறதி! எப்படிப்பட்டமறதி!! அவர்களால் மறக்கப்பட்ட நிகழ்ச்சி எத்தகையது? சாதாரணமானநிகழ்ச்சியா? அன்று! அன்று!! ஒரு பார்ப்பனனை இன்னொரு பார்ப்பனனுக்கு அடிமை என்று, என்றுமில்லாத வழக்கத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு ஓலையில் சாட்சிக் கையெழுத்திட்ட நிகழ்ச்சி! வாழ்க்கையில் — வரலாற்றில்— எந்தக்காலத்திலும் மறக்க முடியாத இத்தகைய ஒரு நிகழ்ச்சியைத்தான், அந்த அந்தணர் பெருமக்கள் அறவேமறந்துவிட்டனராம்! மறந்து, ஓலையைப் பார்த்தபின் "ஆமாம்" என்று ஒப்புக்கொண்டனராம்! எப்படியிருக்கிறது கதையின் போக்கு! இத்தகைய ஒரு நிகழ்ச்சிதான் மாணவர்களுக்குப் பாடமாம்! இதனை அவர்கள் பயில வேண்டுமாம்! பயின்று அறிவு பெற வேண்டுமாம்! இத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் படிக்கும் மாணவர்கள் பெறக்கூடிய அறிவு எப்படிப்பட்டதாக இருக்கும்? இந்நிகழ்ச்சி, மாணவர்களுக்கு ஒழுக்கத்தையா கற்றுக் கொடுக்கும்? கள்ளக் கையெழுத்திட்டு வாழ்க்கையில் வழுக்கிவிழும் ஒழுக்கக் கேட்டினையன்றோ இந்நிகழ்ச்சி கண்ணாடிபோல் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. "அந்தக் காலத்தில், ஆண்டவனே ஆரூரரை அடிமை கொள்வதற்காகக் கள்ளக் கையொப்பமிட்ட ஓலையைக் கொண்டுவந்தார் என்றால், அதே ஆண்டவன் படைப்பான நாங்களும், எங்கள் வாழ்க்கையில் ஏன் இந்த முறையைக் கையாளக் கூடாது" என்ற எண்ணம்தானே மாணவர்கள் உள்ளத்தில் உருப்பெற்று வளரும்! ஒரு நிகழ்ச்சியைப் படிக்கும் மாணவர்களுக்கு, அந்நிகழ்ச்சி எந்தக் கருத்தை அடிப்படையாகக்கொண்டு பேசப்படுமோ, அக்கருத்தே அவர்கள் உள்ளத்தில் ஊன்றி உரம்பெறும். வீரம்—ஒழுக்கம் — நேர்மை ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்ட நிகழ்ச்சிகள், மாணவர்களை அவைகளில் உரம்பெறச் செய்யும். அதுபோலவே, கோழைத்தனம் — ஒழுக்கக்கேடு—நேர்மையின்மை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகள், மாணவர்களை அவைகளில் உரம்பெறச் செய்து அவர்தம் வாழ்க்கையைப் பாழ்படுத்தும். எனவேதான், பள்ளிமாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் அறிவைப் பண்படுத்தும் துறைகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் பிறரும் தங்களால் கையாளப்படும் முறைகளை முன்பின் ஆராய்ந்து பாராமல் மேற்கொள்ளக்கூடாது என்றகோட்பாடு எல்லா நாடுகளிலும் பெரிதும் கவனிக்கப்படுகின்றது. ஆனால், இங்கு....................இங்குதான் அறிவாலும் அளந்தறியமுடியாத அத்துணைப்பெருந்தகையாகிய ஆண்டவன் செய்த அற்புதத் திருவிளையாடல்களை, அறிவுபெற்று, அதன் துணைகொண்டு அவனியில் வாழ்க்கை நடத்தவேண்டிய மாணவ மணிகளுக்குப்பாடமாக வைத்திருக்கிறார்களே! ஆண்டவனை அறிந்து, அவரை வழிபடும் நிலைமை அல்லது முறை, மக்களுக்கு, அவரவர்களின் மனநிலையைப் பொறுத்து இயற்கையாக உண்டாக வேண்டும்.

அங்ஙனமன்றி, மக்கள் உலக வாழ்க்கைக்காகக் கையாளப்படும் சில கட்டாயமுறைகளைப்போல், கடவுளை அறிவதற்கும் கட்டாய முறை கையாளப்படுமானால், அது கடவுள் தன்மைக்கே இழுக்கை உண்டாக்குவதாகும். எல்லாம்வல்ல இறைவன், தன்னால் படைக்கப்பட்ட உயிர்களை (மக்களைத்) தன்னை உணரும்படி தானே செய்யாமல், வேறொருவரைக் கொண்டு தன்னை உணரும்படி செய்விக்கிறார் என்பது உண்மையிலேயே கடவுளின் எல்லாம்வல்ல உண்மைக்கு ஊறு தேடுவதாகும். இதனைக் கடவுளன்பர்கள் உணராமல், உலகந்தோன்றி எவ்வளவோ ஆயிரக்கணக்கான நூற்றாண்டுகள் கடந்துபோன பின், இன்றைக்கும், கடவுளைக் கட்டாயமுறையில் உணர்த்தும் நிலைமையில் நம்நாடு இருக்கின்றதே என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே நாம் வெட்கமும்—வருத்தமும் அடைகின்றோம். மக்களுக்குக் கடவுளுணர்ச்சியை உண்டாக்க முயல்வது, நீருக்குக் குளிர்ச்சியையும், நெருப்புக்குச் சூட்டையும் உண்டாக்க முயல்வதுபோலாகும்.

இனி, ஆரூரரை அடிமை கொள்ள வந்த வேதியரை ஆரூரரும் அறியார்; அந்த ஓலையில் சாட்சிக் கையொப்பமிட்டவர்களும் அறியார்; அவ்வழக்கை உசாவி வேதியர் பக்கம் தீர்ப்புக் கூறிய திருவெண்ணெய் நல்லூர்ப் பார்ப்பனரும் அறியார். ஆனால், சாட்சிக்கையொப்பம் இட்டவர்கள், தங்கள்கையொப்பமே அந்த அடிமை ஓலையில் இருப்பது என்று ஒப்புக்கொள்கின்றனர். இப்படி ஒருவழக்கு, இதற்குமுன்னோபின்னோ நடந்ததாகவோ— நடக்கக்கூடியதென்றோ யாராவதுகூற முடியுமா? இவ்விதமான ஒரு கதையை உருவகப்படுத்தி, அதன் வாயிலாகக் கடவுளுண்மையை நிலைநாட்ட முயன்ற சேக்கிழாருக்கு ஏற்பட்ட துணிவும், முன்பின் எண்ணிப்பாரா இயல்பும் வேறு யாருக்குமே உண்டாகாது. கதை, கடவுளைப்பற்றியது; எனவே, அதன்கண் எந்தவிதமான கருத்தைப் புகுத்தினாலும், அதனைக் கண்ணை மூடிக்கொண்டு மக்கள் நம்புவர்—நம்பவேண்டுமென்ற கோட்பாடு, எதனையும் ஆராய்ந்து, அதன்கண் உண்மை இருக்கிறதா இல்லையா? உண்மை இருந்தால் ஒப்புக்கொள்ளலாம், இல்லையேல் தள்ளிவிடலாம் என்ற முறையில் மக்கள் தங்கள் அறிவைப் பண்படுத்தி-விழிப்படைந்து வரும் இந்நாளிலும் ஏற்றுக் கொள்ளப்படுமா என்பதனையாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இனி, "இந்நிகழ்ச்சி, ஆண்டவன் அருள் விளையாட்டு; இதில் குறை காண்பதும், குற்றம் சாட்டுவதும் குறை மதியினர் செயலாகும்" என்றெண்ணிச் சிலர் எம்மீது சினக்கக்கூடும். உண்மை. பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கேன் என்று நாமும் வாளா இருந்து விடுவதே முறை. கடவுளைப்பற்றின காரியங்களில் தலையிட்டுக் கோடரிக்காம்பாகக் கூடாதென்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், இங்கு பேசப்படும் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சி, ஆண்டவன் அருள் விளையாட்டே என்று நாம் எப்பொழுது தெரிந்துக்கொண்டோம்? தடுத்தாட்கொண்ட புராணத்தை முதலில் இருந்து கடைசிவரை படித்த பின்னர்தானே, "ஓ இதுஆண்டவன்திருவிளையாடல்" என்று தெரிந்துகொண்டோம். ஆண்டவன் திருவிளையாடல்களில் அறிவுக்கும் இயற்கைக்கும் புறம்பான நிகழ்சிகளும் இடம்

(13-ம் பக்கம் பார்க்க)

# ★ அறிவொளி வழங்கிய அறிஞர் ★

—●—

"நம்பிக்கையைநாசம்செய்கிறான். முன்னோர் வழியைப் பிழையுடைய தென்கிறான். புதுவழிகாண முனைகிறான். இளைஞர்களை மயக்குகிறான். 'அறிவு அறிவு' என ஆர்ப்பரிக்கிறான். 'சிந்தியுங்கள்' 'சிந்தியுங்கள்' என எதற்கெடுத்தாலும் செப்புகிறான். 'ஏன்' 'ஏன்' என எதிர்த்துக் கேட்கிறான். இவனை இப்படியேவிட்டு வைப்பது நாட்டு மக்களுக்குக் கேடு பயக்கக் கூடியதாகும். பரம்பரைப் பழக்கமும், தெய்வபக்தியும் சீர்குலைந்துவிடும். இவனைத் தண்டித்தலே முறை."

விலங்கினிலும் மாறுபட்டவனாக—உயர்ந்தவனாக மனிதன் இருப்பதற்கே காரணம், இந்தச் சிந்தனா சக்திதான். இவ் உயர்ந்த பண்பாட்டை வளர்க்க மக்களில் சிறந்தவர்கள் பட்ட கஷ்டநஷ்டங்கள் அமோகம். விஞ்ஞானத்தில் நிரந்தர உண்மைகள்என எதனையும் அறுதியிட்டுக் கூறுதல் முடியாது. மேலும் மேலும் பல புதிய உண்மைகள் ஆராய்ச்சியின் பயனாக வெளியாகின்றன. அவை மறுபடியும் மாறுதல் பெறும் வாய்ப்புடையனவாகவே இருக்கும். விஞ்ஞானம் வளர்ச்சியடையக் கூடியதேயன்றி, குறிப்பிட்டதோர் எல்லையோடு நின்றுவிடக் கூடியதன்று.

ஓர் காலத்தில் உண்மையெனக் கொள்ளப்பட்டவைகள் பிறிதோர் காலத்தில் தவறுடையதெனத் தள்ளப்பட்டுப், புதியதோர் சித்தாந்தம் அதனிடத்தைப் பெறும். அதுவும் பின்னர் மாறுதலுறும். அத்தகைய மாறுதல் உடன்பாடு கொண்டு விளங்கினும் விளங்கும். நேர் மாற்றமுடையதாகத் தோன்றினும் தோன்றும். இவ்வாறு வளர்ந்துகொண்டே வரும் சக்தியுடையது விஞ்ஞானம்.

பார்த்தல், பார்த்தபொருட்களை ஆராய்ந்தறிதல் ஆகிய இருவழிகளால் தான் இன்று நாம் காணும் கண்டு பிடிப்புகள் அனைத்தும் உண்டாக்கப்பட்டன. இவைகளை முதல் முதலில் மக்கள் கண்டு மருண்டனர். புது வாழ்வளிக்கவந்த இவைகளை, வேதனையைப் பெருக்கவந்த விலங்குகளாக மக்கள் கருதினர். ஏற்கவும் மறுத்தனர். கையாண்டு சுகம் பெறவும் தயங்கினர். பின்னர், காலப் போக்கில், அவைகள் தரும் சுகம், அவைகளை வெறுத்த மக்கள் உள்ளத்திலேயே ஓர்வித ஆசையைத் தூண்டிற்று. முதலில் தங்களால் வெறுக்கப்பட்ட ஒன்றையே, விருப்பத்துடன் பின்னர் ஏற்றுச் சுகங்கண்டனர்.

காண்கின்ற உலகத்தை, அழியக் கூடியது எனும் மாயாவாதம், மக்களுக்குள்ள பழைமை மோகம் ஆகிய இரண்டும் மக்களின் அறிவியல் வளர்ச்சியைத் தடுக்கும் இரு பெரும் தடைகளாக இருந்து வருகின்றன. தங்களுடைய வாழ்க்கையைத் தாங்கள் நினைத்தவண்ணம் சீராக்கிக் கொள்ளும் திறம்—சக்தி, தங்களிடந்தான் உள்ளது என்பதை உடனுக்குடன் மறந்துவிடுகின்றனர். ஒவ்வொருவரும் நித்தியப்படி வாழ்க்கையில் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையை யொட்டித்தான், ஒவ்வொருவரிடத்திலும் உள்ள உறவு முறை மாறுதல் பெறுகிறது என்பதை அனைவரும் அறிந்துகொள்ளுதல் முக்கியமாகும்.

இவ்வுலக வாழ்வின் முக்யத்தையும், நலம் பயக்கக் கூடிய அனைத்தையும் வற்புறுத்தினாலன்றி, மக்கள் விஞ்ஞான உலகத்தை நாடிச்செல்வது முடியாத காரியமாகும். இதனை நன்குணர்ந்த சிலர், மதகுருக்கள் சிறுமதியையும், அவர்களால் மக்களிடை பரப்பட்டிருந்த—இருக்கும் மதக் கதைகளையும், அவைகள் மீது மக்கள் கொண்டிருந்த— இருக்கும் பொய் நம்பிக்கைகளையும் தகர்த்தெறிந்து, அறிவியல் போதனை புரிந்து, மக்களை உண்மையான மக்கள் வாழ்வுகொள்ளத் தூண்டினர்—தூண்டியும் வருகின்றனர்.

கல்லடி — சொல்லடி — விஷம் கொடுத்தல்—தீயிட்டுக் கொளுத்தல் —ஜீவிய காலம் வரை சிறையில் தள்ளல் — அறிஞர்கள் எழுதின நூற்களை மறைத்தல்போன்ற அக்கிரமங்களை எல்லாம், மக்களிடம் [illegible]ந்த மதியை வளர்ப்பதின் மூலம் ஆதிக்கம் பெற்றுவந்தோர் செய்துவந்தனர் —வருகின்றனர். ஆதிக்கக்காரர்களின் கோபத்திற் பட்டு, கொடுமைக்[illegible] இன்னல் பல அ[illegible] பவித்தவர்கள் பலரை வரலாற்று ஏடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அறிவொளி தந்த அனைவரையும், அவர்கள் யாத்த நூற்களையும், முன்னையவர் உயிரோடிருந்த காலத்தில், நையாண்டி செய்து கொடுமைக்குள்ளாக்கிய மக்கள், ஏறெடுத்தும் பார்க்க ஒருப்படாத மக்கள், சிலநூறு ஆண்டுகள் சென்றபின்பு, தங்கள்சீற்றத்திற்குள்ளானவர்களைச் சிறப்பித்தனர்—இன்றும் போற்றிப் புகழ்கின்றனர். அந்த லட்சிய வாதிகள் பலன் கருதாப் பணி புரிந்தனர். அவர்கள் அன்று வெற்றி காணவில்லையாயினும், உழைப்பு வீண் போகவில்லை. அவர்கள் விதைத்த சிறு விதை உண்டாக்கிய அறிவொளி இனி என்றென்றும் வெட்டி வீழ்த்த முடியாத அளவில் உலகெங்கணும் பரவித் தழைத்தோங்கி இருக்கிறது. ஆனால் அவர்களை எதிர்த்த வைதீகம், அவர்களுக்கு இடுக்கண் விளைவித்து மகிழ்ந்த மதம், மணல் பேடு சரிவது போல் சரிந்தவண்ணம் இருக்கிறது. இருந்தாலும், மதத்தால் மரியாதை பெறுவோர்—வைதீகத்தோடு வாழ்வைப் பிணைத்துக் கொண்டுள்ளோர் —அறிவியலோடு போரிடப் புறப்படுவதும், புறமுதுகிடுவதும், பின்னரும் மூர்த்தண்ணியமாகத் தாக்க முற்படுவதுமாகவே உள்ளனர்— பரிதாபம்!

பழிச் சொல்லைப் பரிசாகப் பெற்று, கொடுங்கோலர்களின் சீற்றத்திற்காளாகி, வளங் குன்றி வாழ்நாளெல்லாம் வதைந்து, அரிய பெரிய தத்துவங்களை அவனிக்கு அள்ளி வீசிப்போன அறிஞர்கள் பலர் வரலாற்று ஏடுகளில் இடம் பெற்றுள்ளனர். ஆனால், அவ்வளவும் மேல்நாட்டில்.

இங்கு, அவதாரப் பெருமையும், அதுபற்றிப் பேசும் கிரந்தங்களும், பிறப்பிலே பேதம் கற்பிக்கும் புத்தகங்களும் வண்டிக் கணக்கில் உள்ளன. முதல்முதலாக இங்கு, கருத்தில் புரட்சியை உண்டுபண்ணியவர் கௌதம புத்தர் ஆவர். அவர் போதித்த புதுயுகக் கருத்துக்களை இந்த நிலைமாறிடாமல் செய்துவிட்டது பிராமணியம் — ஆரியம். [illegible]

பெயர் கூறி, பிறரிடம் பெற்றுவந்த மரியாதையையேபொய்யெனப்புத்தர் போதித்ததால், அவர் தம் சொற்களால் பாதிக்கப்பட்டோர், அவர் போதனைகளைச் செல்லாக் காசாக்கினர். அவை மக்களிடை பரவவிடாமல் செய்துவிட்டனர். பின்னர் இந்த நாடு ஆரியத்திற்கு வாழ்வளிக்கும் தரணியாகப் போய்விட்டது.

தமிழ் நாட்டில், பழமையைச் சாடி, பொருத்தமற்ற தெய்வக் கதைகளை விளக்கிக் காட்டி, பலரின் தூற்றுதலுக்கு ஆளாகித் தளர்ந்த வயதிலும் அதே பணியை விடாது புரிந்து வருபவர் நமது பெரியார் இராமசாமி அவர்களே யாவர். காலமாறுதலால்பெரியார் அவர்களுக்குக் கொடுந் தண்டனைகள் பல கிடைக்கவில்லையே யன்றி, மக்களிடம் கிடைத்த ஆதரவைக் காட்டிலும், மக்களின் பொல்லாப்பு அமோகமாகக் கிடைத்திருக்கிறது. அவர் ஏற்றிவைத்த அறிவுச் சுடரை இனி ஒருவராலும் அணைக்க முடியாது. எத்தகைய சூறுவளியையுட் தாங்கி நின்று, விளக்கொளியைக் காத்து நிற்க இளங்காளைகள் எண்ணத்தொலையாதோர் உள்ளனர்.

இதன் முன்பும் இத்துறையில் சிலர் சிறு சிறு பணி புரிந்துள்ளனராயினும், அவர்கள், பெரியார் போன்று முழுநேரப் பணியாக—வாழ்க்கைத் தொண்டாக—ஏற்படுத்திக் கொள்ளாததால், அவர்கள் இத்துறையில் முக்கியத்துவம் பெறமுடியாமல் போய்விட்டனர்.

அறிவியல் வாதிகளின் கருத்துக்களை, நேர்மையான முறையில் மறுத்துக் கூறுவதென்பது, எவராலும் முடியாத காரியம். இறுதியில் தோல்வியே சம்பவிக்கும் என்பதை நன்குணர்ந்த வைதீகம் குறுக்கு வழியையே மேற்கொள்ளும். அறிஞர்களின் புதுக் கருத்துக்களை, மாற்றியும், சமயத்திற் கேற்றாற்போல் திருத்தியும் கூறியே பாமர மக்களை ஏவும். பழக்க வாசனையால், வைதீகம் சுட்டிக் காட்டும் அச்சத்திற்கு அடிமையாகியும், வைதீகக் கட்சியைக் காக்க ஆவேசம் கொள்வர் மக்கள்.

* * *

ஆந்திர நாட்டிலும் அறிவியல் வாதிகள் சிலர் தோன்றித் தொண்டாற்றியுள்ளனர். இந்நாட்டில் பெரிதும் பத்திரிகைத் தொழில் வைதிகப் பாதுகாவலர்களின் கைப்பாவையாகிப் போய்விடவே, ஆந்திரநாட்டு அறிஞர்களை நாம் சரிவரத் தெரிந்து கொள்ள முடியாமலே போய்விட்டது. அவர்கள், நமது கண்முன் படாமல் மறைக்கப்பட்டுவிட்டார்கள்.

தென்னாலிராமன் எனும் பெயரையும், அவன் பெயரைச் சம்பந்தப்படுத்தி எழுதப்பட்டுள்ள கதைகளையும் நம்மில் பலர் அறிந்திருக்கலாம். அவனைத்தான், அறிவியல் போதித்த முதல் ஆந்திரனாகக் கொள்ளவேண்டும். அவன், விஜயநகர சாம்ராஜயத்தில் கிருஷ்ண தேவராய மன்னரிடம் விதூஷகனாக இருந்ததாக நம்பப்படுகிறது. அரசனின் குருவான தாத்தாசாரியார் ஓர் வைணவர். அந்தக்குரு ஒரு சமயம், 'ஒரு சைவனை வைணவன் ஒருவன் பார்த்து விட்டால் அடுத்த ஜன்மத்தில் அவ்வைணவன் கழுதையாகப் பிறப்பான்' எனக் கூறினாராம். இது கேட்ட தென்னாலிராமன், தான்ஒரு சைவன்ஆனதால், அரசசபைக்குஒரு கழுதையை இழுத்து வந்துநிறுத்தி, அதன் முன்னர் விழுந்துவணங்கினான். இதுகண்ட அரசன், தெனாலிராமனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதா எனக்கிண்டல் செய்தார். தென்னாலிராமன் சிரித்துவிட்டு, தாத்தாச்சாரியார் கூறும் உரையை நம்புகிறவர்களும், அதன்படி நடக்கிறவர்களும்தான் அத்தகையவர்கள் என இடித்துக் கூறினானாம். அரசன் பொன் மாம்பழம் தானம் கொடுத்த கதையைக் கேட்டு, தென்னாலிராமன் பார்ப்பனர்களுக்குச் சூடிட்ட கதையை அனைவரும் அறிந்தே இருப்பார்கள். இதுபோன்ற பலப்பல அறிவியற் செயல்கள், அவன்வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு முறை அரசன், அவனைக் கடலிலுள்ள நீர்த்துளிகளைக் கணக்கிடச் சொன்னாராம். அதற்கு அவன், ஒரு வண்டிநிறைய மணலைக் கொண்டுவந்து கொட்டி, அதிலுள்ள சிறுமணற் கற்களை எண்ணினால் ஏற்படும் அளவிற்குச் சமமாக, கடலிலுள்ள நீர்த்துளிகள் இருக்குமென்று பதில் உரைத்தானாம். இம்முறையில் அவன் அறிவுக்குப் பொருத்தமற்ற காரியங்களைச் சாடியுள்ளான்.

கவி வேமனா குறிப்பிடத் தகுந்தவர். அவர் வெறும் கவைக்குதவாத் தத்துவ சாஸ்திரியல்ல. தலையை மழுங்கச் சிரைத்துக் கொள்வது ஒருவனின் இச்சையை அடக்கிவிடாது என்றும், கற்கள் கடவுள் ஆகமுடியுமானால், மலையையும் மண்ணையும் உணவாகக் கொடுக்கலாமே என்றும் சுட்டிக்காட்டுவதன் மூலம் அறிவியலை வளர்த்துள்ளார். தம்முடைய அனுடவத்தைத் தர்க்கரீதியாக மெய்ப்பித்துள்ளார். அவருடைய கவிகளில் மதிப்பிடத்தகுந்த விஞ்ஞான உண்மைகள் நிரம்பி இருக்கின்றன.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தராவ்பகதூர் K. வீரேசலிங்கம் பந்துலு பெயர் பெற்ற சமுதாய சீர்திருத்தக்காரராகவும், விதவை மணத்தை வற்புறுத்துவதில் ஒப்பற்றவராகவும்விளங்கினார். அதற்காக அறிவின் துணைகொண்டு அவர் வாதித்தாரேயன்றி, புராணப் புனைசுருட்டுக்குள் ஆதாரம் தேடும் வீண் வேலையை மேற்கொள்ளவில்லை. சத்ய சம்வர்த்தினி எனும் கிழமைஇதழை தாமே ஆசிரியராக இருந்து நடத்தினார். அவர் நூறுக்கு நூறு அறிவியல் வாதியாகவே இருந்தார். எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல், எவர்க்கும் பணியாமல் அவர் தொண்டு புரிந்தார்.

ஆரியவேதங்கள் நான்கும் எவராலும் ஆக்கப்படாதது—ஆண்டவனால் தரப்பட்டதுஎன்றெல்லாம்சொல்லப்படுகிறதே, அது அவ்வளவும் பொய் என்பது தக்க மேற்கோள்களுடன் விஜயநகரம் தாத்தா ராயுடு சாஸ்திரி அவர்களால் விளக்கப்பட்டுள்ளது. பித்தாபுரம் பெண்டயால சுப்ரமணியசாஸ்திரிஎன்பவர் மாபாரதத்திற்குஅறிவியல் துணைகொண்டு புது விளக்கம் கூறியுள்ளார். பாண்டவர்களின் கோரிக்கை பொருத்தமற்றதென்றும், கவுரவர்கள்போக்கு நேர்மையானதென்றும் எடுத்துக் காட்டியுள்ளார். இதேபோன்று குர்ஜால எதுக்குரி நரசையா என்பவரும் பால்நாடு வீரர்களைக் குறித்து விளக்கம் கூறியுள்ளார்.

தென்னாலி இராமசாமி சவுத்திரி அவர்களும், பார்ப்பனர்கள், சொந்த ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக எந்தெந்த வகையில் இந்தச் சமுதாயத்தை அமைத்துக் கொண்

டுள்ளார்கள் என்பதை, ஆணித்திறமாக—காரசாரமாக—விளக்கமாகக் கூறியுள்ளார். அவர் முதல்தரமான பார்ப்பன விரோதி என்று பழிக்கப் படுகிறார். ஆனால் அவர் பார்ப்பனியத்துக்குப் பகைவரே யன்றி, எந்தத்தனிப்பார்ப்பனருக்கும் எதிரியல்ல.

கோவூர் வள்ளூரி சூர்யநாராயண ராவ் என்பவரும் ஓர் பெயர் பெற்ற அறிவியல் வாதியாவர். சமுதாயத்தையும், மதத்தையும் அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனும் நோக்குடையவர். அதுபற்றிப்பல இலக்கியங்கள் செய்துள்ளார். தன் சொத்து முழுதையும் இப்பணிக்காகவே அர்ப்பணித்துள்ளார்.

கோபராஜு இராமச்சந்திரராவ் என்பவர் ஓர் முதல்தரமான அறிவியல் வாதி. ஒவ்வொரு இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் விஞ்ஞான ரீதியில் விளக்கம் கூறுவதில் சமர்த்தர். இன்று, அவர் குடும்பமே ஒரு விஞ்ஞானக் குழுவாக அமைந்துள்ளது.

விஞ்ஞானம் எனும்பத்திரிகையை நடத்திவந்த, காலிபட்ட வெப்பா கோண்டையாவும் குறிப்பிடத் தகுந்தவராவார்.

எதற்கெடுத்தாலும் மதம், ஆண்டவன் என்று பேசப்படும் தலைவர்கள் மலிந்துள்ள நாட்டில், கலை வளர்ச்சி எனும் பேரால் வெறும் புராணப் புளுகுகளுக்கே புது மெருகு கொடுத்து முதலிடம் தரப்படும் நாட்டில், நூற்றுக்கு ஆறு ஏழுபேர்களுக்குமேல் கல்வி பெற்றில்லாத நாட்டில், வைதீகத்தையே வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டுள்ளவர்களை ஆசிரியராகக்கொண்டு நடத்தப்படும் பத்திரிகைகள் மலிந்தநாட்டில், அறிவியல்வாதிகள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாகத்தான் இருப்பர். ஆச்சரியப்படத் தேவையுமில்லை—ஆயாசப்படக் கூடியதுமல்ல இது. ●

# தமிழ் வளர்ச்சி

**[இரா. நெடுஞ்செழியன்]**

உயர்தனிச் செம்மொழி என்று போற்றப் படுவது! இலக்கண இலக்கியச் செறிவுடையது! பழம் பெருங் காலந்தொட்டு எழில் குன்றாது இயங்கி வருவது! உள்ளக்கருத்தை ஒலிக்குறிப்பினால் உணர்த்தத் தொடங்கிய காலமுதல் இயற்கையோடு இயைந்து வளர்ந்து வருவது! கழகமிருந்து போற்றிக் காப்பாற்றப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது! இதனுடன் தோன்றிய ஏனைய, வழக்காறு ஒழிந்து காணப்படவும், இதுவொன்று மட்டுமே இதுகாறும் உயிருடன்நின்றுநிலவும் பெற்றியமைந்தது என்று மொழிநூல் வல்லுநர் பலராலும் போற்றப்பட்டு வருவது! என்று இவ்வாறாகப் போற்றிப் புகழப்படும் நம் தாய்மொழியாம் தமிழின் இற்றைக்கால நிலையை உய்த்துணர வேண்டியது இன்றியமையாததாகிறது.

ஒருகாலத்தில் வளர்ந்து செழித்திருந்த தமிழ், பல்வேறுஏதுக்களால் தாக்குண்டு, செழுமை குன்றி, வளர்ச்சியற்ற நிலையை எய்தியது என்பதைவரலாறு நமக்கு உணர்த்தியுள்ளது. தடைப்பட்டுத் தேங்கிய நிலையை எய்திய தமிழ், இன்றும் அதே நிலையில் தான் இருக்கிறது; வளரவில்லை என்பதைத் தமிழ்ப்புலவர்கள் சிறிது பொழுதாயினும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

பல்வேறு துறைப்பட்ட உலகியல் அறிவு, பரந்தோங்கிப் பார்முழுதும் ஆட்சி செய்து கொண்டிக்கும் இக்காலத்தில், மக்கள்தம் உள்ளத்தில் ஊறி எழும் கருத்துக்களை நீரருவியின் வீழ்ச்சிபோல் வெளியில் கொட்டுவதற்கு ஏற்ற வண்ணம் தமிழ் மொழிவளம் பெறவில்லை; வளரவில்லை; வளர வழியமைக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, ஆங்கில மொழியை எடுத்துக் கொண்டால், அது சொற்செறிவுடைய தாய் எண்ணிய கருத்துக்களை எழிலுடைச் சொற்களாலே விளக்கிக் காட்டும் அளவுக்கு வளம் பெற்றிருக்கிறது. தமிழ் தோன்றிய காலத்திற்குப் பிறகு பல்லாயிரம் ஆண்டு கழிய, பின்தோன்றிய ஆங்கிலம் வளர்ச்சியுற்று விளங்கவும், தமிழ் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் வளர்ந்த ஒரு நிலையிலேயே நிற்கவுமான ஏது என்ன? ஆங்கில இலக்கியப் புலவர்கள் அம்மொழியினை வளர்க்கச், சென்ற சில நூற்றாண்டுகளாக எடுத்துக் கொண்ட பெருமுயற்சி அந்த வெற்றியினை அதற்குக் கொடுத்தது. ஆங்கில இலக்கியப் பெருமக்கள் புதிய புதிய கருத்துக்களை விளக்கப் புதிய புதிய சொற்களைச் சேர்த்து வளர்த்துக் கொண்டே வந்தனர். ஆங்கிலம் இயற்கையோடு இயைந்து வளர்ந்து வராத மொழியாய் இருந்தமையின் அதனிடத்துவேர்ச்சொற்கள் இல்லை. புத்தம் புதிய கருத்துக்களை விளக்கச் சொற்கள் அகப்படாத பொழுது வேற்றுமொழிச் சொற்களையாவது எடுத்து ஆளவேண்டிய இன்றியமையாத நிலையில் ஆங்கில இலக்கியப் பெருமக்கள் இருந்தனர். அவர்கள், தம் தாய் மொழியை வளர்த்தனர்; ஆகவே அது வளர்ந்தது. தமிழ்ப் பெருமக்கள் தமிழை வளர்க்கவில்லை. ஆகவே அதுவளரவில்லை. ஆனால் ஆங்கிலர் தம் தாய்மொழியைக் காப்பாற்றி வந்தார்கள்; ஆகவே அது வளர்ச்சியுற்றிருக்கிறது. தமிழ்வளரவில்லை; இருக்கிறது.

ஆங்கிலத்தைப் போலத் தமிழ், வேர்ச்சொற்கள் பஞ்சமுடையதல்ல. இருந்தும் ஆங்கிலம் வளர்ந்தது; தமிழ் தாழ்ந்தது. இடையில்பலநூற்றாண்டுகளாகத் தடையேற்படாமல் இருந்திருந்தால், புத்தம் புதிய கருத்துக்களைத் தெளிவு படுத்தத் தமிழ் பயன்பட்டிருக்கும். ஆங்கிலத்தைப் போல் பிறன் மொழிச் சொற்களைக் கடன் வாங்க வேண்டிய நிலையில்லாமல், தமிழில் வேர்ச் சொற்களைக் கொண்டே புத்தம் புதிய சொற்களை உண்டாக்கிக் கொள்ள இயலும். எடுத்துக்காட்டாக, 'சைகிள்' என்ற ஆங்கிலப்பெயருடைய பொருள் தமிழ் நிலத்தில் வந்திறங்கும்போது, அதனைச் சுட்டிக் காட்டுவதற்குரிய தமிழ்ச் சொல் இல்லாமலிருப்பது இயற்கையே. அதன் வடிவு, பண்பு, இயக்கம் முதலியன கண்டறிந்து அதற்கேற்ற தமிழ்ப் பெயர் கொடுக்க இயலுமா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது 'ஒற்றைச் சுவட்டு வண்டி' அல்லது 'ஈருருளி வண்டி' என்ற காரணப்பெயரை அதற்குச் சூட்டுவது பொருந்துவதாகும். இந்தமுறையில்பெரும்பாலான புதிய பொருள்களுக்குப் புதிய சொற்களை உண்டாக்க வேண்டும். இந்த வேலையைப் புலவர் குழாம் செய்ய முடியும்; செய்யவேண்டும். பொருள்க

(9-ம் பக்கம் பார்க்க)

## ஏஜண்டுத் தோழர்களுக்கும், வாசகர்களுக்கும்

—

"திராவிடநாடு" காரியாலயம் புது இடத்துக்கு மாற்றப்படுவதால், 7—12—47-ல் பத்திரிகை வெளிவராது. 14—12—47-ல் வழக்கம்போல் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கும் ஏஜண்டுத் தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

திராவிட நாடு

காஞ்சி] 30—11—47 [ஞாயிறு

# வெந்த புண்ணில்......!

ஆம், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுதல் கூடாது. இம்முறையால் மனக்கசப்புப் பெருகுமேயன்றிக் குறைவுபடாது. ஏற்கனவே இருந்த உறவும் கெடும். அந்தஸ்த்தை மட்டும் அளிக்கும் ஆற்றல் உடையது அதிகாரம் எனும் தவறான எண்ணம் கொள்ளுதல் கூடாது. பிரத்தியேகமான சில பொறுப்புகளையும் அதிகாரம், உடனடியாக உண்டாக்குகிறது. இதனை நன்கு உணர்ந்து, பெற்றுள்ள அதிகாரத்தை, மக்களுக்கு நன்மைக்கான காரியத்தில் காட்டுவதன் மூலம் தான், அதனைச் சிலநாளுக்காவது தம்மிடமே இருக்கப் பார்த்துக் கொள்ளமுடியும். மக்களின் நல்லாசியையும் ஆதரவையும் பெற்று, ஆட்சிப்பீடத் தமர்ந்ததும், பெற்ற அதிகாரத்தைக் கண்டு நிலைதடுமாறி, மக்களை மதிக்காது மாநிலம் ஆள மார்க்கம் தேடினால், அதிகாரத்தமர்த்தி மனம் மகிழ—கண்குளிரக் கண்ட அதே மக்கள், தாங்கள் பெற்ற ஏமாற்றத்தையும் எரிச்சலையும் என்றாவது ஓர்நாள் செயலில் காட்டியே தீருவர். அதிகாரமும் வேறு சிலரின் கைமாறும். மக்களை மதிக்காத ஆட்சி நீடித்து நிற்பது முடியாத காரியம். இப்பொதுவிதியை நாடாள வருவோர் யாவராயினும் கருத்துள் கொள்ள வேண்டியது, அவர்களுடைய முதற் கடமையாகும்.

இதனைக் காங்கிரஸ் மந்திரிகள் மறந்து போய்விட்டார்களென்றே எண்ணவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் எடுத்துக்கொள்ளும் சில பல நடவடிக்கைகளில் இம்மறதி வெளிப்படையாகத் தெரிகிறது. பிரசார பலமும், படை பலமும் போதிய அளவு இருக்கிறது எனும் நம்பிக்கையினாலேயே, இம்மறதி நோய் அவர்களை நன்கு பற்றிக் கொண்டிருக்கிறது போலும்!

முதலாளிகள் — பண மூட்டைகள் விஷயத்தில் அவர்கள் காட்டும் பரிவிலும் பாசத்திலும், ஒரு சிறு அளவாவது ஏழைத் தொழிலாளர் பால் காட்டுவது அதிக நன்மைதரக் கூடியதாகும். சென்ற மார்ச் 11-ந் தேதி முதல் ஜூன் 19-ந் தேதி முடிய சென்னை பி அண்டு சி மில் தொழிலாளர்கள் செய்த வேலை நிறுத்தத்தை அவர்கள் இதற்குள் மறந்திருத்தல் கூடாது. பதினொன்காயிரம் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தது விளையாட்டிற்காக அல்ல. உற்பத்தியைக் குறைக்க வேண்டும் எனும் தீய நோக்கத்திற்காகவும் அல்ல. வழ்வில் அவர்களுக்குள்ள வறுமைப் பிணியைப் போக்கிக்கொள்ளவேண்டியே, வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். ஆசை வார்த்தை கூறியும், அச்சுறுத்தியும் அவர்களை, வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு, அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. குறைகள் கவனிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டது. தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்க முறையற்ற முறையிலும் முயற்சிக்கப்பட்டது. எப்படியோ வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுத் தொழிலாளரும் வேலைக்குத் திரும்பினர். அவர்கள் விரும்பினதற்கு விரோதமாக, அவர்கள் குறைகளைக் கேட்டுத் தீர்ப்பளிக்கக் கட்டாயப் பஞ்சாயத்து முறை கையாளப்பட்டது. இதனால் தொழிலாளர் அடைந்த நன்மை பூஜ்யம் என்றுதான் சொல்லவேண்டும். மத்தியஸ்தராக நியமிக்கப்பட்ட நீதிபதி லட்சுமண ராவ், கேளாக்காதாராகவே இருந்துவிட்டார். தொழிலாளர் கோரிய கோரிக்கைகள் அனைத்திற்கும் 'இல்லை' யெனும் ஒரே தீர்ப்பை வழங்கி இருக்கிறார். இதனை ஏற்றுக் கொண்டு, இனியும் ஓராண்டிற்கு இத்தீர்ப்பைச் செயலாற்றத் தொழிலாளர்களுக்குக் கட்டளைப் பிறப்பித்துவிட்டது அரசாங்கமும். 'நம்மவர்கள் நாடாளுகிறார்கள். அது ஒன்றே போதும் நமது பசியைப் போக்க' எனத் தொழிலாளர்கள் முடிவுக்கு வந்து விடுவார்கள் எனும் உயர்ந்த நோக்கத்தோடு ஆளுவோர் இத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டு கட்டளை பிறப்பித்துவிட்டனர் போலும்!

கோடிக்கணக்காகச் சம்பாதித்த வெள்ளை முதலாளியிடம் அதிகாரத்தைக் காட்டுதல் முறையாக இருக்க, தங்களுக்கு அதிகாரத்தைத் தந்த அதே மக்கள் வயிற்றில் அடிக்கவா, அதிகாரத்தைக் காட்ட வேண்டு ?

அரசாங்கத்தின் இத்தவறான போக்கால், உற்பத்தி பெருகப்போவதில்லை. அதற்கான ஆர்வத்தைத் தொழிலாளர்களிடம் எதிர்ப்பார்த்தலும் ஒழுங்கானதாகாது. வாழ்க்கைச் செலவும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. அந்த அளவிற்கு தொழிலாளர்கள் வருமானம் உயரவில்லை. இந்நிலையில் அரசாங்கமும், அவர்களைத் திருப்திபடுத்துவதைவிட்டு, அவர்கள் கோரிக்கைகளை அசட்டை செய்வது விரும்பக்கூடியதாகாது.

வேலைநிறுத்தத்திற்கு முன்னர் பி அண்டு சி மில் தொழிலாளர்களுக்கு எத்தகைய குறைகள் இருந்தனவோ—எந்தத் தேவையின் காரணமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டதோ—அவை இன்றும் அப்படியே இருந்துகொண்டுதான் இருக்கின்றன. அவர்கள் புண்பட்ட நெஞ்சில், அரசாங்கத்தின் கட்டளை வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் வேதனையைத் தான் உண்டாக்கும். மேலும் அவர்களின் மனக்கசப்பு ஆபத்தான தன்மையை அடைவதற்குள், அரசாங்கம் இட்ட கட்டளையை மாற்றிக்கொண்டு, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதே நன்மை பயக்கக் கூடியதாகும். அதிகாரத்திலுள்ளோர் செவிபுகுமா இது?

✱

## 7½ மாதங்களில்

இந்திய சர்க்கார் வருமானம் 171 கோடி 15 லட்சம்

செலவு ,, 197 ,, 89 ,,

துண்டு விழும் தொகை ,, 26 ,, 24 ,,

என்று இந்திய சர்க்காரின் பட்ஜெட் கூட்டத்தில் நிதி அமைச்சர் தோழர் R. K. சண்முகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தமிழ் வளர்ச்சி

7-ம் பக்கத் தொடர்ச்சி

ளுக்கும், கருத்துக்களுக்கும் புதிய சொற்களைத் தமிழிலேயே கண்டு பிடிக்க இயலாத விடத்துத் தமிழ் ஒலிக் குறிப்பிற்கேற்ப அவைகளைத் திருத்திக் கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக 'Penciline என்ற ஆங்கிலப் பெயரமைந்த புதியமருந்து ஒன்று இப்பொழுது வந்திருக்கிறது. அதற்கேற்ற தமிழ்ப் பெயரைத் தமிழிலிருந்தே எடுத்தமைத்துக் கொள்வதென்பது எளிமையுடையதல்ல. இத்தகையநிலையில் 'பென்சிலின்' என்று தமிழில் கொள்வது தவறாகாது.

பெரு வழக்குடைய பிறமொழிச் சொற்களுக்கேற்பத் தமிழில் சொற்கள் இருக்குமேயாயின் அவற்றைப் பெருவழக்குடைய சொற்களாக ஆக்கும் பெரும் பணியை இலக்கிய அறிஞர்கள், மேற்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாகச் சாதம், ஜலம், சந்தோஷம், க்ஷேமம், போன்ற சொற்களுக்கு மாறாக, சோறு, நீர், மகிழ்ச்சி, நலம் போன்ற சொற்களைஎடுத்தாளச்சிறிதுமுயற்சி எடுத்துக் கொள்ளப்படுமேயானால் நாளடைவில்மொழி வளர்ச்சியடைய ஏதுவாகும். இயலாத விடத்துத் தமிழ் ஒலிக்குறிப்பிற்கேற்பப் பிறமொழிச் சொற்களைத்திருத்தியாவது தமிழின் சொல் வளத்தைப் பெருக்கும் துறையில் மற்றவரைக் காட்டிலும் தமிழ்ப் புலவர்கள் இறங்க வேண்டியவர்களாகிறார்கள்.

புதுக் கருத்துகளைத் தெளிவாக்கும் சொற்களைத் தமிழிலேயோ, இயலாதவிடத்துத்தமிழோடு சார்ந்த நிலை படுத்தியோ தமிழின் சொல் வளத்தைப் பெருக்க தமிழ்ப் புலவர்கள் முதற்கண் முன்வரவேண்டும். அரசியலார் உதவி, அறிஞர் உதவி, மக்கள் உதவி இந்தத் துறையில் நாளடைவில் பெருகும் வண்ணம் நிலைமை வந்து கொண்டிருக்கிறது. தமிழறிஞர்கள்ஒன்றுகூட வேண்டும். ஒன்றுகூடிப் பேரறிஞர்களைக் கொண்ட குழுக்கள் அமைத்து ஆவன செய்ய முற்பட வேண்டும். ஏனைய நாடுகளின் இலக்கியப் பேரறிஞர்கள் இதனைச் செய்கிறார்கள். ஏன் இங்கு செய்யலாகாது?

பழைமைக்கு வளைந்தும், நெளிந்தும், படிந்தும் வாழ்கிறவர்களைத் தவிர்த்துப், புத்துலகம் அமைக்க உணர்ச்சி பெற்று எழுச்சியுற்று விளங்கும் இளம்புலவர்கள்,— தமிழ் ஆர்வம் பொங்கி எழும் இளைஞர்கள் —தமிழை வளர்க்க, புத்தம் புதிய கருத்துக்களை வளர்க்க, புதிய பாதையை அமைக்க ஒன்று கூடித் தீரவேண்டும்.

கல்வி அமைச்சர் அவனுசிலிங்கனார் பல் பொருளகராதி ஒன்று தமிழில்காண ஒரு நூறாயிரத்திற்குமேல் நிதி சேர்த்துள்ளனர். இந்த முயற்சி போற்றதத்தக்கது. வரவேற்கத்தக்கது. ஆனால் தமிழறிஞர் என்று சொல்லிக் கொண்டு, தமிழுக்குப் பகைவராய் விளங்குவோரைக் கொண்டு அந்த அகராதியைச் செப்பனிட அமைச்சர் முயல மாட்டார் என்பது எமது துணிபு.ஆகவேஇந்த வேலையைச் செவ்வனே செய்து முடிக்கும் முயற்சியை எடுத்துக் கொள்ளத் தமிழ்ப்பேரறிஞர்கள் முந்துறவேண்டும்.

'எல்லார்க்கும்எல்லாம்' என்றிருப்பதான புத்துலகம் நோக்கித் தமிழகத்தை இழுத்துச் செல்ல ஏனையோரைக் காட்டிலும் புலவர்கள் பாடுபடவேண்டும். பழைமைக் கருத்தை மாற்றித் தேவையான புதுமைக்கருத்துகளைச் செந்தமிழ்த் தேனில் குழைத்து இலக்கிய வட்டியின்மூலமாக மக்களுக்கு ஊட்ட வேண்டும். பாரதியாரும், அவரை விடச் சிறப்புடைய முறையில் பாரதிதாசனும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளனர். இலக்கியத்தின் போக்கை மாற்ற, இலக்கியத்தை வளர்க்க, இலக்கியத்தைப்புதுப்பிக்க இளம்புலவர்களே முன்வாருங்கள்! நாடு உங்களை எதிர்பார்த்து நிற்கிறது! இளைஞர்களால்தான் செயலாற்று வழியை மாற்றவோ, வளர்க்கவோமுடியும். அவர்கள் மாற்றியிருக்கிறார்கள். எனவே இளம்புலவர்களும் அவர்களுக்குரிய கடமையைச்செய்தால் தமிழகம் புதிய பாதையில் விரைந்து செல்லும் என்பது திண்ணம்!

வங்கம் தன்தாய் மொழியான வங்காளிமொழியை அரசியல் மொழியாகஏற்றுக்கொண்டுவிட்டது. அசாமும், ஐக்கிய மாகாணமும் தங்கள் மொழிகளையே அரசியல் மொழிகளாக ஆக்கிக்கொண்டுவிட்டன. எனவே தமிழகமும் தன்தாய்மொழியாம் தமிழை அரசியல்மொழியாகக் கொள்ளவேண்டும். அந்த முயற்சி அண்மையில்வெற்றிபெறும்; வெற்றி பெற்றே தீரும். தமிழகப் பாராளும் மன்றத்திலிருந்து சிற்றூர் மன்றம் வரையிலும் தமிழே சொல்லாடலாக அமையும். நீதிமன்றங்கள், அலுவலகங்கள், பணிமனைகள், வாணிகக் களங்கள், பல்கலைக்கழகங்கள், அங்காடிகள் ஆகிய எங்கணும் தமிழே முதன்மொழியாக ஒலிக்கப்பெறும். அவற்றிற்கெல்லாம் உரியவாறு தமிழைத் திறனுடையதாகச் செய்ய வேண்டிய பொறுப்புப் புலவர்களைச் சார்ந்ததாகும். ஆகவே கடமையைச் செய்ய இளம்புலவர்கள் புறப்படுவார்களாக!

●

## சென்னையில்
## தோழர் அழகிரிசாமி

சில காலமாக உடல் நலக்குறைவால் இயக்கப்பணியில் இருந்து விலகி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த தோழர் K. V. அழகிரிசாமி அவர்கள், மீண்டும் தம்முடைய பணியினைத்தொடர்ந்து செய்ய வந்துள்ளார் என்பதறிந்து மகிழ்கிறோம்.

16—11—47-ல் சென்னை எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்தில் தோழர் அழகிரிசாமி அவர்கள் வந்திறங்கியபோது, அவரை வரவேற்ற காட்சி, எப்பொழுது வருவார் என்று எதிர்பார்த்திருந்த பொது மக்களின் ஆவலையும் அகமகிழ்ச்சியையும் எடுத்துக்காட்டுவது போல் இருந்தது.

16—11—47-ல் பெரம்பூரில் நடைபெற்ற கூட்டத்திலும், 18—11—47-ல் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற உணவு—உடை குறையுடையோர் மாநாட்டிலும், 22-11-47-ல் ஏழுகிணற்றுத் திராவிடர் கழகத்திறப்பு விழாவிலும், 23—11—47-ல் ராபின்சன் பார்க்கில் நடைபெற்ற என். எஸ். கே வரவேற்புக் கூட்டத்திலும் தோழர் அழகிரிசாமி அவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றி விட்டு, 25-11-47-ல் சென்னையை விட்டு மதுரைக்குப் பயணமானார்.

13—12—47-க்குமேல், கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வோர் கீழ் உள்ள முகவரிக்கு எழுதவும். K. V. அழகிரிசாமி, அலங்கா நல்லூர் B. O., மதுரை.

# கிருஷ்ண பக்தி

[K. அன்பழகன்]

மாலை மணி 6½-இருக்கும். அப்பொழுதுதான் — மாலைக் காட்சி முடிந்ததால்—பக்த மீரா படத்தைப் பார்த்த பின் மக்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

"இராமசாமி! மீரா, எப்படி" என்றான் கந்தன்.

"அருமை, அருமை, அந்தப் பாட்டுக்கள் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. என்ன உருக்கமான தொனி. எம். எஸ். என்றால் கேட்கவா வேண்டும்"— என்று மளமளவென்று பேசினான் இராமசாமி.

"அதையல்லப்பா கேட்டது. மீரா படம் எப்படி" என்றான் கந்தன்.

"நல்ல பக்திப் படம். கிருஷ்ண பரமாத்மாவின் கருணையே கருணை. மனசுருக்கும் கதை."

"அதிருக்கட்டும் இராமசாமி, கதை பொருத்தமாத் தோணுதா?" என்று கேட்டான் கந்தன்.

"நல்லா சொன்னே போ—கதைக்குஎன்னப்பாகுற்றம்?" என்று கேட்ட இராமசாமியிடம் கந்தன் கூறினான்.

"மீரா ஒரு அரச குடும்பத்திலே பிறந்த பெண். சகல சம்பத்துக்களோடும் வாழ்ந்தவள், அவளுடைய வாழ்க்கையே மடிந்துவிட்டது அந்தக் கிருஷ்ணனால். ராணாவை மணந்த மீரா வாழ்க்கையிலே விருப்புக் கொள்ளாமல் போகத்தான் வேறென்ன காரணம்? குழந்தையிலே இருந்த கிருஷ்ண பொம்மையைக் கும்பிட்டுக் கும்பிட்டுப் பழகி—கிருஷ்ணனையே உண்மையென்று எண்ணி, அவனுக்குக் கோவில் கட்டச் செய்து, பஜனை செய்ய ஆரம்பித்து, கிருஷ்ணன், கோவிலிலே இல்லை, துவாரகா புரியில் இருக்கிறான் என்று நம்பி, கணவனே தெய்வத்தினும் மேலான தெய்வம் என்ற முன்னோர் மொழியையும் மறந்து—கொண்ட கணவனையும் கைவிட்டு இப்படி ஓடச் செய்தது, அந்தத் தொட்டில் பழக்கந்தானே?

கிருஷ்ண விக்ரகத்தின் அழகு—இப்படியா 'மீராவின்' வாழ்வைக் கெடுக்கப் பயன்பட வேண்டும்? இதிலிருந்தே தெரிகிறதல்லவா, குழந்தை உள்ளத்தில் பதியவைக்கும் கருத்தே குழந்தையின் வளர்ச்சியோடு இயைந்து—வாழ்க்கையையே மறக்கவும், மாற்றவும், மடிக்கவும் காரணமாகிறது என்பது.

ஏன் தான் இந்தக் கிருஷ்ண விக்கிரகத்தை— மீராவுக்குக் காட்டிக் காட்டி, மீராவின் மனத்தையே கொடுத்தார்களோ பாவிகள்!" என்றான் கந்தன்.

அதைக் கேட்ட இராமசாமியோ, "என்னப்பா, இப்படியெல்லாம் பேசுகிறாய். கதையோ, கிருஷ்ணனிடம் கொண்ட பக்தியை விளக்குவது. பக்தி முற்றி-முத்தியடைந்தாள் மீரா. பக்திவளர்ச்சிக்குக் காரணமாக-(கருவியாக) இருந்தது-அந்த விக்ரகம். அதன் அழகுதான் பக்தி வளர்ச்சிக்கே துணையாயிற்று. அதைக் குற்றம் கூறுவதா? கிருஷ்ணனின் அருளாலேயே அப்படியெல்லாம் நடந்தது" என்றான்.

"கிருஷ்ணனின் அருள், இப்படியா மீராவின் வாழ்வைப் பாழாக்கவேண்டும்? ராணாவைச்சோக சித்திரமாக்க வேண்டும்? அதுதான் என் கேள்வி" என்று கேட்டபடி நடந்தான், கந்தன்.

* * *

திடீரென்று, "ஐயோ, பாவம்! பாருடா, பாரு, கண்ராவியா இருக்கே! வயசு 14, 15 தானே இருக்கும்போல இருக்கு. அதோ பாருடா, ஒண்ணைப்போல ஒண்ணு. இரண்டும் ஜோடியா, ஒரு வயசு தான் வித்தியாசம் இருக்கும்போல இருக்கு. இந்தக் கொடுமையை எப்படித்தான் பார்க்கிறதோ! சகிக்கவில்லையே மனசு. என்ன அநியாயம்! என்னடா இது?" என்று கூவினான் கந்தன், பக்கத்திலேதான் நண்பன் இராமசாமியும் இருக்கிறான் என்பதையும் மறந்து.

இராமசாமியும் அதையேதான் கவனித்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் ஒன்றும் புரியவில்லை. கை கால்கள் ஓடாதது போலவே மனமும் ஓடாமல், நின்றான். அந்த நிலையிலே அவன், எதை அறிவான் கந்தனுக்குக் கூற,

இவர்களைப்போலவே, மற்றும் பலர், பாலத்தின்வழி போய்க்கொண்டிருந்தவரெல்லாம் அங்கே நிற்கத் தலைப்பட்டனர். ஒரு சிறு கூட்டமே தேங்க ஆரம்பித்துவிட்டது. எல்லோரும் இதுபற்றியேதான் பேசினர். ஆனால் எவருக்கும் முழு உண்மை தெரியவில்லை. அதற்குமாறாகக், கற்பனைக்கு அழகாகவும் பொருத்தமாகவும் சொல்லப்பட்ட செய்திகள் எவையோ, அவைகளே உண்மைச் செய்திகளாக உலவத் தலைப்பட்டன.

கூட்டத்திலிருந்து சிலர் கலைவர். சிலர் வந்துகூடுவர். இரண்டு மூன்று பேர்களாகத் தனித்தனியே கூடிப் பேசுவர். அவரவரும் பிறரிடம் விசாரித்ததில் தங்களுக்கு எது மனதில் சரிபோலப் பட்டதோ, அதையே முழு உண்மையாகக் கருதிடுவர். தங்கள்வழியே போகுமுன், ஒரு முடிவை முணுமுணுத்துக் கொண்டே செல்வர்.

"எல்லாம், அவரவர் தலையெழுத்து, நாமென்ன செய்யலாம்."

"பூர்வ ஜென்ம பலாபலனை அநுபவிக்காமல் எப்படித் தப்புவது? பாவ புண்ணியமென்கிறாளே, அது பொய்யா?"

"அவன்விட்ட வழி. யார் தடுக்க முடியும்."

"விதி என்ன செய்யும்ண்ணு கேக்கிறாளே, பார்த்தேளோன்னோ?"

"அப்பா, அம்மா, எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாளோ, இதுகளை வளர்க்க. இதுக, இப்படி மிதக்குது இங்கே."

"என்ன கஷ்டமோ, யார் கண்டா?"

"மாற்றாந்தாய் கொடுமைக் காரியோ, மாமியாதான் எப்படிப் படுத்தினாளோ?"

"தகப்பன் குடிகாரப் பாவியோ, என்னமோ?"

"கன்னி கழிந்ததுகளோ, அதுவும் இல்லையோ."

"எந்தப்பாவி இப்படிப் பண்ணி, ஆத்திலே விட்டானோ தெரியலையே!"

"நகைக்கும்நட்டுக்குமாகவா, இப்படிக் கழுத்தை நெரிப்பாங்க, அந்தப் பாவி என்ன வாழவா போறான்?"

"என்ன அநியாயம், அக்கா தங்கைகளோ! ஒருதாய்க்கு இரண்டு பெண்தானோ? ஒண்ணுவது உயிர்

தப்பிச்சு வீட்டுக்குப்போய்ச் சேதி சொல்லக்கூடாதா?"

"எந்தத் தாய்க்கிழவி யாவது, இதுகளைக் கெடுக்கப் பார்த்திருப்பாளோ? அது பிடிக்காமே, இப்படிப் பண்ணிகிட்டுதுங்களோ!"

"பள்ளிக்கூடத்திலே படிச்சிகிட்டிருந்திருக்குங்க; மேலே படிக்க வைக்கலேண்ணு இப்படிச் செய்திருக்குங்க."

"படிச்சாலே, பெண்கள் இப்படித்தான். காதல், கீதல்ண்ணு புத்தகத்திலே படிச்சதை நடத்திப்புட்டு, வீட்டிலே மாட்டேண்ணதும் இப்படியெல்லாம் செய்துடறதா? எவ்வளவு கஷ்டம் மற்றவாளுக்கு?"

"என்னதான் தப்புத்தண்டாவா யிட்டாலும், பெரியவா, இப்படியா வீட்டைவீட்டுத் துரத்திடறது! நாளைக்கு, போலீஸ்காரன் விலங்கு பூட்டறப்பல்ல தெரியப்போவுது!"

"தப்புத்தண்டா நடத்தியிருக்குங்க. வீட்டுக்குத் தெரிஞ்சுபோனதும்—பயந்துகிட்டு—இப்படிச் செய்திருக்குங்க. பார்த்தா நம்பளவா மாதிரிதான் இருக்குதுக. இருந்தும் நம்பளவா மாதிரி தைரியமா, நடந்துக்கத் தெரியலேயே!"

"என்னதான் கெட்டுப் போனு என்ன? இதுகளுக்கு இருக்கிற அழகுக்குப் பரத நாட்டியம் கத்துக்கிட்டாலே போதுமே! நல்லா வாழலாமே!"

"வயிற்றுவலியோ, நோய் நொடியோண்ணு சொல்றத்துக்கும் இல்லையே, இரண்டும் ஜோடியாயல்ல மிதக்குதுக."

"ஜாதியிலேருந்து தள்ளிவிடுவாங்களோண்ணுபயமோ? சமூகக்கட்டுப்பாட்டை எண்ணி இப்படிச் செய்திருக்குங்களோ! சாரீரம் இல்லாட்டிகூட, இந்தச் சரீரத்துக்கும், அழகுக்கும் சினிமாவிலே சேர்ந்திருந்தா, சகல சம்பத்தோடும் வாழலாமே! அதுகூடண்ணு தெரியல்லே இதுகளுக்கு."

"இந்தச் சிறுவயசிலே உயிரைவிட என்னநெஞ்சழுத்தண்டி! இந்தக் காலத்திலே ஏதடி கடவுள் பயம், இதான் கலி காலம்கிறாளே அதேன்னே?"

இவ்வாருகப் பலப்பல பேசினர், அந்தக்காட்சியைக் கண்ட மக்கள். இரண்டு இளம்பெண்கள், நல்ல அழகுடையவர்கள், ஆற்றோரத்திலே—பிணமாக ஒதுங்கி இருப்பதைக் காணும் மக்கள், பேசாமல் இருப்பது எங்ஙனம்? அவரவருடைய பரிதாப உணர்ச்சியும், அன்புள்ளமும், அவரவருடைய அநுபவத்தையும், அறிவையுமே ஆதாரமாகக்கொண்டு சொற்றொடர்களாக வெளி வந்தன.

இப்படிப்பட்ட கருத்துக்களைக் கேட்டுக்கொண்டிருந்த வாலிபர்களான இராமசாமியும் கந்தனும், ஒரு முடிவுக்கும் வரமுடியாத நிலையில், நின்றும் பயனில்லாததால் அதைவிட்டு நகர்ந்தனர். ஆயினும், அவர்களுடைய உள்ளமோ மேலும் மேலும் கவலையில் ஆழ்ந்ததை அவர்களுடைய முகம் காட்டத் தவறவில்லை.

"கந்தா! அவ்வளவு அழகுள்ள பெண்களை நாம் காண்பதே கடினம்! ஆனல் அவர்களுக்கோ சாவதும் எளிதாக இருக்கிறது!"

"ஆம்! இப்படிப்பட்டவர்கள்தான் சமுதாயத்தின் செல்வத்தை அழகுடையதாக்குபவர்கள்! வருங்காலச் சந்ததிகளைக் கலையின்ஒளியெனத்திகழச் செய்பவர்கள்! இவர்களுக்கா இந்தக் கதிநேர வேண்டும்? என்முன் கந்தன்.

"நம்மைப்போன்ற வாலிபர்கள்—எவரும் இவர்களை மணக்க முன்வரவில்லையோ? இருக்காதே, இவர்களுடைய அழகுக்குப் பலரும் போட்டியிடுவரே?" என்றுன் இராமசாமி."

"வரதட்சிணை கொடுக்கமுடியாததால் தடைப்பட்டிருக்கலாமோ? ஒருவேளை காதலுக்குப்பின் கைவிடப்பட்டவரோ என்னவோ? ஆடவர்களிலே பலருக்கும் "காதல்" வேடிக்கை. பெண்களுக்கோ வேதனை, சில சமயத்தில் உயிருக்கே உலை.

கந்தா! ஒருவேளை கணவனை இழந்து கன்னிப் பருவத்திலேயே கைம்பெண் ஆனவர்களோ? உள்ளம் உடைந்ததால் இப்படி உருக்குலைந்தனரோ?"

"இராமசாமி! அப்படியானலும் கூட நம்மைப்போன்ற வாலிபர்கள் தான், மறுமணம் செய்துகொள்ளவும் ஒப்புவரே இக்காலத்தில்! எனினும் அவர்களின் உள்ளத்தில் நிலைத்துள்ள பழமை எண்ணம் ஒழிந்தாலல்லவா, இந்த உறுதி ஏற்பட முடியும்?—அந்த உறுதி மட்டும் ஏற்பட்டிருந்தால்......." என்று ஒரு பெருமூச்சோடு முடித்தான் கந்தன்.

"இராமசாமியோ—கவலையோடு—கிருஷ்ணுநீதான்காப்பாற்றவேணும். ஏழைகளோ, அனுதைகளோ! யாரறிவார்! கிருஷ்ணு! நீதான் கதி"

என்று கூறியவண்ணம் நடந்தான். கந்தனும்அதைஆமோதிப்பவன்போல் பின்தொடர்ந்தான்.

மறுநாட்காலையில், வழக்கம்போல் கந்தன், அன்றுவந்த தினசரியான "தேச பக்தி"யைப்புரட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய கவனத்தையெல்லாம் கவர்ந்தது அதன் மூன்றுவது பக்கத்திலே 6-வது பத்தியிலே காணப்பட்ட ஒரு சிறு செய்தி.

"இரு சிறுமிகள் தற்கொலை,
கிருஷ்ணபக்தி காரணமாம்"

கோவை 10—8—46 இவ்வூரில் உள்ள பிரபல வக்கீல் ஒருவரின் குமாரியான ருக்மணி என்ற 15 வயதுள்ள பெண்ணும், அதன் பள்ளிக்கூட சினேகிதியான இலக்குமி என்ற 14-வயதுச் சிறுமியும் நேற்று மாலை ஆற்றுவெள்ளத்தில் குதித்து உயிர் துறந்தனர். இளம் வயதிலிருந்தே வளர்ந்து வந்துள்ள "கிருஷ்ணபக்தியின்" காரணமாக இந்தத்தற்கொலை ஏற்பட்டதாகத் தெரிகிறது, "கிருஷ்ணன்" அடிக்கடி தன்னைக் கூப்பிட்டது போல் தோன்றி வந்ததாலேயே—ருக்மணி—கிருஷ்ண பக்தியால் ஆற்றில் குதித்ததாகவும் ருக்மணியிடத்தில் அன்பு கொண்டிருந்த இலக்குமியும்—விட்டுப்பிரிய மனமில்லாததால்—தாலும் விழுந்து உயிர் துறந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தச்செய்தியைப் படித்து முடித்த கந்தன், எதிரேவந்து நின்ற இராமசாமியைக் கண்டதும், படித்ததைக்கூற எண்ணினன். ஆனல், முதல்நாள்—மாலை அந்தக் காட்சியைக் கண்டு திரும்பும்போது—"கிருஷ்ணு! நீதான் காப்பற்றணும்" என்று இராமசாமி கூறியதுதான் நினைவுக்குவந்தது. துக்கமும் கோபமும் தொண்டையை அடைத்தது. கண்கள்சுழன்றன—மயக்கமுற்றுன்.

சாய்ந்த கந்தனைத்தாங்கிப் பிடித்தான் இராமசாமி. தண்ணீர்தெளித்து—முகத்தை துடைத்தபின்—கந்தன் கண்திறந்தான். அதைக்கண்ட இராமசாமியோ, சிறிது திருப்தியோடு, கிருஷ்ணு! நீதான் துணை என்றுன்.

கந்தனே, மறுபடியும் மயக்கமுற்றுன்.

*

## சீர்திருத்தக் கலப்பு மணம்

—

நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மைத்துனரும் T. A. மதுரம் அவர்கள் தம்பியு மான தோழர் T. A. பாலசுப்பிர மணியம் அவர்களுக்கும், சென்னை ஜெகநாத பாகவதர் புதல்வி மோக னும்பாளுக்கும் 24—11—47ல் சீர் திருத்தக் கலப்புமண வாழ்க்கை ஒப்பந்தம், சென்னைத் தியாகராய நகரில், கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் இல்லத்தில் மிகவும் சிறப் பாக நடைபெற்றது. மேற்படி வாழ்க்கை ஒப்பந்தம், தோழர்கள் மா. போ. சிவஞானம், ப ஜீவானந் தம், சி. என். அண்ணாத்துரை ஆகிய மூவர் முன்னிலையில் நடை பெற்றது. சீர்திருத்தத் திருமணத் தின் நோக்கத்தையும், கலப்பு மணத் தின் அவசியத்தையும் குறித்து மூவ ரும் சொற்பொழிவாற்றினர்.

சினிமா, நாடக, நடிகர்—நடிகை கள்—பொதுமக்கள் உட்படச் சுமார் 15000 பேர் மேற்படி வாழ்க்கை ஒப்பந்த விழாவில் கலந்து கொண்டனர். கும்பகோணம்தோழர் கள் K. K. நீலமேகம் அவர்களும் V. சின்னத்தம்பி அவர்களும் காஞ்சி A. K. தங்கவேலர் அவர்களும் இன் னும் பல வெளியூர் இயக்கத் தோழர் களும் வந்திருந்தனர். பல சிறப் பட்ட பரிசுகள், சினிமா, நாடகத் துறைகளிலுள்ள அன்பர்களாலும் பொதுமக்களாலும் மணமக்கட்கு வழங்கப்பட்டன.

நகைச்சுவை அரசரும் T. A. மதுரம் அவர்களும் வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினர். விழா பகல் 12 மணிக்கு இனிது முடிவுற்றது.

மாலையில் நடைபெற்ற தேநீர் விருந்துக்குத் தோழர் M. K. தியாக ராஜ பாகவதர் உட்படப் பல பிர முகர்கள் வந்திருந்தனர். இசை உலக ஜோதி திருவாவடுதுறை T. N. இராஜரத்தினம் அவர்களும், வேணுகான இன்னிசை வள்ளல் T. N. R. நடராசசுந்தரம் அவர் களும், அபிநவபால நந்திகேஸ்வர N. P. இராகவன் அவர்களும், லய பூஷண ஹஸ்தாலங்கார K. A. தங்கவேலு அவர்களும் இன்னிசை நாதசுரக்கச்சேரி நடத்தி அனைவரை யும் இன்புறுவித்தனர்.

—


வெளிவருகிறது!! வெளிவருகிறது!!!

# "மன்றம்"

(மாத வெளியீடு)

ஆசிரியர்.

**இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,**

**முதல் இதழ் 1—1—48-ல் வெளிவரும்**

ஆண்டுக்கட்டணம் ரூ. 5, ஆறுமாதக்கட்டணம் ரூ. 3,

**தனி இதழ் விலை அணா எட்டு.**

விபரங்கட்கு:—

மானேஜர்

"மன்றம்"

30/79 செம்புதாஸ் தெரு

சென்னை.


## திராவிட மறுமலர்ச்சிக் கழகத் திறப்பு விழா.

—

30—11—47 ஞாயிறு மாலை 5 மணிக்குச்சின்னகாஞ்சிபுரம் தும்ப வனம் தெருவில் தோழர் மு. இரத் தினம் அவர்கள் தலைமையில் நடை பெறும். அதுசமயம் சென்னை தோழர் N. V. நடராசன் அவர்கள் கொடியேற்றுவார். R. ஜார்ஜ் அவர் கள் பெரியார் படத்தைத் திறந்து வைப்பார் மற்றும் பலர் சொற்பொழி வாற்றுவார்கள். அன்பர்கள் அனை வரும் வருக.

G. S. மணி
செயலாளர்.

## ஈப்போ

—

பெரியார் ஈ. வே இராமசாமி அவர்களின் பிறந்த தின விழா 12—10 47 மாலை ஈப்போ கோனலி ரோட்டிலுள்ள "பொச்சு ஸ்கூல்" கட்டிடத்தில் தோழர் S. R. S. நாயுடு அவர்கள் தலைமை யில் நடைபெற்றது.

—

## "திராவிடநாடு"

### காரியாலய இடமாற்றம்.

—

"திராவிடநாடு" காரியாலயம் கீழ்க்குறிப்பிடும் இடத்துக்கு மாற்றப்படுகிறது. ஏஜண்டுத்தோழர் களும் சந்தாதாரர்களும் பிற அன் பர்களும் 14—12—47 முதல் புதிய விலாசத்துக்கே மணி ஆர்டர் முதல் எல்லாவிதமான கடிதப் போக்கு வரத்துக்களையும் வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

புதிய விலாசம்:—

**"திராவிடநாடு" காரியாலயம்**
95, திருக்கச்சிநம்பி தெரு
காஞ்சிவரம்.

"DRAVIDANADU" OFFICE
95, Tirukkachinambi Street,
Conjeeveram

## ஆசிரியர் சிந்தனைக்கும்

4-ம் பக்கத் தொடர்ச்சி

பெறுகின்றனவே என்பதனையும் உணர்ந்து கொள்கிறோம். ஆண்டவன் திருவிளையாடல்களுக்கும் அறிவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இருக்க முடியாதா — இருக்கக் கூடாதா என்பது குறித்து ஆராய்ச்சியும் செய்கின்றோம். ஆனால், இங்கு பேசப்படும் நிகழ்ச்சி, ஆண்டவன் திருவிளையாடல்களில் ஒன்று என்பதனை உணராத நிலையில் இருந்த திருவெண்ணெய் நல்லூர்ப் பார்ப்பனர்கள், அந்த அடிமை ஓலையில் காணப்பட்ட சாட்சிக்கையொப்பங்களைத் தங்களுடையன என்று எப்படி ஒப்புக்கொண்டனர்? உண்மையாகவே, அவர்கள் அந்த ஓலையில் சாட்சிக்கையொப்பமிடவில்லை. என்றாலும், அவை, அவர்களின் கையொப்பங்களே என்று அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகச் சேக்கிழார் கூறுகின்றார். ஒன்று, அவர்களால் உண்மையாகவே கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்; அல்லது, நிகழ்ச்சி ஆண்டவன் அருள் விளையாட்டு—அதற்காக அவர்கள் ஒப்புக்கொண்டனர் என்றாவது கதையின் போக்கு அமைந்திருத்தல் வேண்டும். அடிமை ஓலை கொண்டுவந்து ஆரூரருடன் வழக்காடியவர் ஆண்டவன் என்பதைச் சாட்சிக் கையொப்பமிட்டவர்கள் அறிந்திருந்தால், அவரை நோக்கி, "நீர் யார் — எங்கிருப்பவர்—இவ்வூரில் உம்முடைய வீடு எந்தத்தெருவில் இருக்கிறது?" என்று கேட்டிருக்கவே மாட்டார்கள்.

இனி, ஆரூரரை அடிமைகொள்ள வந்த வேதியரை நோக்கி,

"வேதியரே! நீர்கொண்டுவந்திருக்கும் அடிமை ஓலையில்காணப்படும்சாட்சிக் கையெழுத்துக்கள் எங்களுடைய கையெழுத்துக்கள் போல் காணப்படுகின்றன; ஆனால், நாங்கள் இந்த அடிமை ஓலையில் கையொப்பம் இடவே இல்லை. எனவே நீர் கள்ளக் கையெழுத்திட்டு எங்களை ஏமாற்றப் பார்க்கிறீர்"

என்று அவர்கள் கூறி அந்த வேதியர்மீது வழக்குத் தொடுத்தார்கள்; உடனே ஆண்டவன், தம்முடைய உண்மை வடிவத்தைக் காட்டி, "என் மீதா வழக்குத் தொடுத்தீர்கள்? நன்று, நன்று உங்கள் செய்கை" என்று கூறி நகைத்தார். உடனே அவர்கள் அச்சம் கொண்டு, ஆண்டவன் திருவடிகளில் விழுந்து வணங்கித், தாங்கள் அறியாது செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண்டனர். என்ற முறையிலாவது கதை அமைந்திருந்தால், ஏதோ கடவுளின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றாய் இருக்கலாம் என்று நாமும் வாளா இருந்து விடலாம். ஆனால், கதையின் போக்கு அப்படி அமையவில்லையே! சாட்சிகளாகக் கையொப்பமிட்டவர்கள், அந்தக் கையொப்பங்கள் தங்களுடையனவே என்று யாதொரு ஐயுறவுமின்றி ஒப்புக்கொண்டு, அவ்வொப்புதலின் பேரில், ஆரூரர் அந்த வேதியருக்கு அடிமையாதலே முறையென்று வழக்கு முடிவு செய்யப்பட்ட பின்னரன்றோ, அவர்கள், அந்தவேதியரை நோக்கி, "நீர்யார்—எங்கிருப்பவர்?" என்று கேட்டதாகவும், அதற்கு அந்த வேதியர், அவர்களை நோக்கி, "இங்குள்ள ஒருவரும் என்னை அறியீரா? என் வீட்டைக் காட்டுகிறேன்; வாருங்கள்" என்று கூறி, அவ்வூரிலுள்ள அருட்டுறை என்னும் சிவன் கோயிலுக்குள் போனார் என்றும், பின்னர், ஆரூரருக்கு மட்டுமே தம்மை இன்னார் என்று உணர்த்தினார் என்றுமே கதையின் போக்கு அமைந்துள்ளது. இந்த விதமான இரண்டுங்கெட்ட முறையில் அமைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியைத்தானா தேடியெடுத்து மாணவர்களுக்குப் பாடமாக வைக்கவேண்டும்? இந்நிகழ்ச்சியைக் கற்பதால் மாணவர்கள் தெரிந்துகொள்ளக் கூடிய உண்மையோ—ஒழுக்கமோ—நேர்மையோ என்ன? என்பதனையாவது ஆசிரியர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டாமா? ஆண்டவன் ஆரூரரை அடிமை கொண்டு தடுத்தாட் கொண்டதற்கும் மாணவர்கட்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்—இருக்க வேண்டுமென்றுகருதி, அதனை அவர்கட்குப் பாடமாக வைத்துள்ளனர்?

ஆரூரன், கட்டிய மனைவியைக் கலங்கவிட்டுக், கண்டவள்பின்னால் காமுற்று அலைந்து திரிந்தது போன்ற கீழ் நிலை, இன்றைய மாணவர்களுக்கும் ஏற்படவேண்டுமென்று கருதியா அத்தகைய ஒரு நிகழ்ச்சியை மாணவர்களுக்குப் பாடமாக வைத்துள்ளனர்?

ஆரூரருக்கு மனைவியாகப் பேசப்பட்டு மணப்பந்தரில் வந்திருந்த பெண், தான் ஆரூரரைக் கணவனாகப் பெறும்பேறு வாய்க்காததால், ஆரூரரையே நினைந்து — நினைந்து மனம் நொந்து மாண்டாள் என்றும் சொல்லப்படுகின்றதே! இத்தகைய ஒரு இரங்கத்தக்க நிலை, தடுத்தாட்கொண்டபுராணத்தைப் பாடமாகக் கொண்டு படிக்கும் மாணவர்கட்கு மனைவியராகப் பேசப்படும் பெண்கள் அனைவர்க்கும் ஏற்படவேண்டுமென்பதா, இத்தகைய ஒரு புராணத்தைப் பள்ளிமாணவர்க்குப் பாடமாகவைத்திருப்பதன் நோக்கம்? அல்லது, இத்தகைய ஒரு நிகழ்ச்சி தான், மாணவர்கட்கு ஆண்டவன் அருளை அள்ளி அள்ளி வழங்கவல்லது என்று கருதி, அதனை அவர்கட்குப் பாடமாகவைத்துள்ளனரா? ஆண்டவன் அருளை மாணவர்க்கு உண்டாக்கக்கூடிய வேறு நிகழ்ச்சி எதுவும் கிடைக்கவில்லையா?

ஆண்களுக்கு ஒரு மனைவிமட்டும் இருந்தால் போதாது; இருமனைவியர் இருத்தல் வேண்டுமென்ற 'சிறந்த' முறையினை மாணவர்கள் இன்றியமையாது தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக அத்தகைய ஒரு நிகழ்ச்சியை அரும்பாடுபட்டுத் தேடிக்கண்டுபிடித்துப் பாடமாக வைத்துள்ளனரா? ஆனால், இரண்டு மனைவியரை மணந்து கொண்ட ஆரூரர் (சுந்தரர்) பட்ட அல்லல்களைக் கூறும்பகுதி மாணவர்களின் பாடபுத்தகத்தில் சேர்க்கப்படவில்லை. என்றாலும்,

"முன்னிய வேட்கை கூரப்,
பின்பு நம் ஏவலாலே பிறந்தனை
மண்ணின்மீது..............."

என்றபாடலால், அவ்வுண்மையும் ஒருவாறுவிளக்கப்பட்டுள்ளது. தடுத்தாட்கொண்ட புராணத்தில் வரும் இப்பாடலின் பொருளை ஆசிரியர், மாணவர்களுக்கு விளக்கும்போது,

"முன்னிய வேட்கைகூர"

என்ற சொற்றொடருக்குப் பொருள் என்ன என்று மாணவர்கள் கேட்டால், ஆரூரரின் பழையவரலாற்றை ஆசிரியர், "ஆலாலசுந்தரர் (இப்போது ஆரூரர்) கைலையில் இருந்த காலத்தில், அனிந்திதை, கமலினி என்ற இரு பெண்கள்மீது இச்சை கொண்டார்; அவ்விச்சையைத் தீர்த்துக்கொள்ளவே ஆண்டவன் அவரை மண்ணுலகில் பிறக்கும்படி செய்தார்" என்பதாக அச்சொற்றொடருக்கு விளக்கம் உரைப்பார். இந்த அளவு விளக்கம்

போதாதா, எதனையும் துருவித் துருவி ஆராய்ந்து உண்மைகாண வேண்டுமென்ற விழிப்புணர்ச்சிபெற்றுள்ள இன்றைய மாணவர்கட்கு! ஆண்டவன் அருளைப்பெற்ற ஆரூரருக்கே, ஒரு மனைவி போதாது, இரு மனைவியர் வேண்டுமென்ற தணியா வேட்கை பிறந்ததென்றால், ஆண்டவனருளைப் பெறாமல் பெறமுடியாமல் மாயையில் கிடந்துழலும் எம்மனோர்க்கு இத்தகைய வேட்கை இருப்பது இயல்பேயன்றோ என்று தானே மாணவர்கள் மட்டுமல்ல; இத்தகைய கடவுட் கதைகளைப் படிக்கும் எவருமே கருதுவர்.

எனவேதான், மக்களின் ஒழுக்க வாழ்க்கைக்கு ஊறு தேடும் முறையில் அமைந்துள்ளபுராணக்கதைகளை மக்கள், அதிலும் இளமாணவர்கள் அறியவிடாதபடி தடுத்தாட்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் பெரிதும் ஆசிரியர்களுக்கே இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றோம். ஆண்டவன் ஆரூரரைத் தடுத்தாட் கொண்ட புராணத்தை மாணவர்கட்குக் கற்பிக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளால், மாணவர்களின் வளர்ச்சியுற்றுவரும் அறிவு தடுத்தாட் கொள்ளப்படுமானால், அவர்களின் எதிர்கால வாழ்வு அறியாமை மிகுந்த ஒழுக்கக் கேட்டினுக்கே கொண்டுபோய் விடும் என்பதனை ஆசிரிய அன்பர்களும், பாடபுத்தகத் தேர்வுக் குழுவினரும், அரசியலாரும் உணரவேண்டும். இன்றைய மாணவர்கள் தான் எதிர்காலப் புத்துலகச் சிற்பிகள் என்பதை எவரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது—கூடாது. ✽

# துக்கவாரம்

ஆனந்தசுதந்திரம், அடைந்து விட்டோம்
ஆடுவமே! பள்ளுப்பாடுவமே!

ஓட்டல் தோறும், வீடுதோறும், பள்ளிதோறும், காலைமாலை இரவு எந்த நேரமும், கீதம் கேட்கிறது.

சென்னையிலே, தஞ்சை, திருச்சி, மற்றும் பல ஊர்களிலே, துக்கவாரம் நடைபெற்றது!

துக்கவாரம், மேலும் நீடித்து நடத்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாருக்கு, என்ன, துக்கம், என்று அறியக்கூடச், சர்க்காருக்கு அக்கறை இருப்பதாகத் தெரியக் காணோம்.

ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் 'பேர்போன' ஆசிரியர்கள்—அதிலும் தகராறுக்கு என்றுமே வராத தமிழாசிரியர்கள், துக்கவாரம் கொண்டாடுகிறார்கள், வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டபிறகு, மகஜர் பலனளிக்காத பிறகு—சம்பளம் போதாது என்று.

அமைச்சரை அணுகினாலோ, அவர் வறுமையால் வாடும் அந்தத் தமிழாசிரியர்களை, இழிவாகப்பேசி மனதைப் புண்படுத்தியே அனுப்புகிறாராம். சென்னையில் ஒவ்வொரு பேட்டையிலும், தங்கள் குறையை எடுத்துக்கூறி

சுதந்திரநாட்டில்
தமிழ் அமைச்சர் ஆட்சியில்

எங்கள் நிலை இது—என்றுவிளக்கி வருகிறார்கள் தமிழாசிரியர்கள்.

துக்கவாரம்—துக்கத்தோடு முடிந்து விடாது. நேரடிநடவடிக்கைக்குத் தொடக்கமாகவே அமையும் என்று தெரிகிறது.

வறுமையில்வாடி, அமைச்சரால் அலட்சியப்படுத்தப்பட்டு, சங்கடங்களைச் சுமந்து கொண்டிருப்பதை விடச், சிறையிலே சென்று கிடப்போமே—சீரழிவு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நாட்டுமக்கள் உணரட்டுமே, என்றுமனம்உடைந்து பேசுகிறார்கள்.

ஆங்கில ஆட்சி அகன்றது—ஆங்கிலத்துக்குள்ள தனிமதிப்பு அகன்றது—இனித்தாய்மொழிக்கு உயர்வும், தாய்மொழி ஆசிரியர்கட்கு, மதிப்பும் பிறக்கும்—அமைச்சரோ, குறளைக்கொட்டிப் பேசுகிறார்—கலைக்களஞ்சியம் அமைக்கிறார்—இளைஞர்—இப்படிப்பட்டவருடைய ஆட்சியிலே இதுவரை இருந்துவந்த இழிவும் பழியும் நீங்கி, இல்லாமை ஒழிந்து, எமது நிலை உயரும் என்று எண்ணி ஏமாந்தோம்—எமது துயரை உம்மிடம் தெரிவிக்கிறோம், செந்தமிழ் நாட்டவரே! எங்கள் கோரிக்கை நியாயமற்றதா, குறை, தீர்க்கப்படவே முடியாததா, என்று, கேட்போர் மனம் உருகக் கேட்கின்றனர், ஏழ்மையில் சிக்கியுள்ள தமிழாசிரியர்கள்.

ஏறக்குறைய, எல்லாப்பத்திரிகைகளும்—இந்துஉட்பட—இவர்களின் குறை, களையப்படத்தான் வேண்டும் என்று எழுதிவிட்டன. அரசியல் கட்சிகள் அனைத்துமே அவர்களுக்கு ஆதரவு காட்டுகின்றன. என்றாலும், அமைச்சர் அசைந்து கொடுக்க மறுக்கிறார்—அலட்சியமாகக் கருதுகிறார்.

தமிழாசிரியர்களால், ஆலைத் தொழிலாளர்கள் போல, உழவர் போல, போராட்டம் நடத்த முடியுமா! கிளர்ச்சி செய்ய அவர்களால் இயலுமா? அப்படிப்பட்ட கிளர்ச்சிகளை எல்லாம் கூட அடக்கிவிட்ட எமக்கு, இவர்களின் எதிர்ப்பா, ஒரு பிரமாதம்!—என்று இறுமாப்புடன் எண்ணுகிறார்கள் ஆளவந்தார்கள்.

காங்கிரசை, கம்யூனிஸ்டு, திராவிடக் கழகம், ஆகிய, எதிர்க்கட்சிகள் மட்டுமே கண்டிக்கின்றன, என்று எண்ணினோம், ஆனால், தமிழாசிரியர்கள் கண்டிக்கின்றனரே, அவர்கள் மனக்குறையைக் கூடத் தீர்க்க முன்வராதது நியாயமா என்று பொதுமக்கள், தீவிரமாக யோசிக்கத் தொடங்கிவிட்டனர். யோசிப்பதோடு மட்டுமில்லை — தமிழாசிரியர்களுக்கு யோசனைகள் சொல்லவும் தொடங்கிவிட்டார்கள்.

துக்கவாரக் கூட்ட நடவடிக்கைகளை அமைச்சர், ஒற்றர் மூலம் தெரிந்துக்கொள்வாரானால், மறியல், உண்ணாவிரதம், பள்ளிகளில் வேலை நிறுத்தம், என்று பலதிட்டங்கள், அக்கூட்டங்களில், வெட்டிக்கோ வீராப்புக்கோ அல்ல—வேதனையிலே பிறந்த உறுதியுடன், பேசப்படுவதைக் கேள்விப்படக் கூடும். நிலைமையை, நேர்மையையும் நியாயத்தையும் மதிக்கும்யாரும், இப்படியே விட்டுவைக்கமாட்டார்கள். தமிழாசிரியர்கள் சிந்தும் கண்ணீர், வீண் போகாது.

தமிழாசிரியர், சார்பாகக் கிளர்ச்சியை, முன்னின்று நடத்திவைக்க, ஒரு கூட்டுப்படை நிச்சயமாகத் தயாராகும், என்பதை அமைச்சர் உணரவேண்டும். பணம் இல்லை என்ற பழம் பாட்டோ, தமிழாசிரியர்கள் சூனாமானாக்கள் என்று கூறும்

(16-ம் பக்கம் பார்க்க)

# கல்விமுறை எப்படி இருக்கவேண்டும்!

[டாக்டர் பராஞ்சிபே]

இந்நாட்டின் கல்வி இருவழிகளில் சீர்படவேண்டும். இங்கு கல்வி பரவ வேண்டியது ஒன்று; அதை நன்கு ஒழுங்குபடுத்தி அமைக்கவேண்டியது மற்றொன்று. முன்னைய முறைக்குப் பொருளாதார உதவி தேவை.

கல்வியைப் பரப்பும் விஷயத்தில் ஆரம்பக் கல்வியைக் கட்டாயப்படுத்துவது அவசியமென எல்லாரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இதைக் கூடிய விரைவில் ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் முக்கிய கடமையாகப் பாவிக்கவேண்டும் என்றும் கருதப்படுகிறது. இதனால் செலவு அதிகரிக்கும் என்பது உண்மையே; எனினும் நாடு இதற்கு வழிகோல வேண்டியதுதான். செலவினங்களைக் குறைப்பதன் மூலம் தேவைத் தொகை முழுவதும் கிடைக்காது. இங்கு ஒரு விஷயம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் சேர்ப்பது மட்டும் போதாது. அங்கு நாலு அல்லது ஐந்து வருஷம் நிறுத்திவைத்துப் படிப்பிக்கவேண்டும்; இல்லாவிட்டால் பிரயோசனப்படும் அளவு அவர்கள் கற்க முடியாது. அரைகுறைப்படிப்புப் பழையபடி கல்லாமையில் கொண்டுபோய் விடும். கட்டாயப்படிப்பு அமுலிலுள்ள இடங்களைத் தவிர, இந்தியா முழுவதும் பெரும்பாலும் குழந்தைகள் ஒன்று அல்லது இரண்டு வகுப்புகளில் படித்து, படிப்பை நிறுத்துவது தற்கால வழக்கமாக இருந்து வருகிறது. இவர்களுக்காகச் செலவிட்ட பணம் முழுவதும் பாழ்தான். ஆகவே ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை பிரயோசனகரமாகச் செலவிடப்படவில்லை. மேலும் கட்டாய முறை இங்கு தேவை. வயது வந்தவர்களுக்குச் சிறிது நேரமாவது கற்பிக்கும் திட்டமும் தேவை. ஓரளவு பெரியதாயிருக்கும் சகல கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதோடு, மாணவர்கள் தங்கள் படிப்பைத் தொடர்ந்து உபயோகிக்கவும் அதன் மூலம் மென்மேலும் அபிவிருத்தியடையவும் உதவி செய்யுமாறு புத்தகசாலைகளையும் வாசிப்புச் சாலைகளையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கவேண்டும். இத்துறையில்வேலைசெய்யச் சிலர் தாமாக முன்வருவர்.

பொது சேவையிலீடுபட்டவர்களில் ஒருசாரார், முக்கியமாகப் பிற்போக்கான சமூகங்களைச் சேர்ந்தவர்கள், ஆரம்பக்கல்விதான் மிக முக்கியமானதென்றும், உயர்தரகல்வி முழுவதும் அவ்வளவு முக்கியமானதல்லவென்றும் கருதுகிறார்கள். தேசத்தின் முன்னேற்றத்துக்கு உயர்தரக் கல்வியும் மிக முக்கியமானதே. ஏனெனில் உயர்தரக்கல்வி கற்றவர்களிடையிருந்து இச்சமூகங்களுக்குத் தலைவர்கள் தோன்றுவார்கள். பல திறப்பட்டகல்வித்தரங்களிலும் ஒன்றிற்கொன்று முரண்பாடு கொள்ளலாகாது. ஒரு தனிமுறையின் அம்சங்களாகவே கொள்ளல் வேண்டும். சகலருக்கும் ஆரம்பக்கல்வி கிடைப்பதும், உயர்தரக்கல்வியால் பயனடையக் கூடியவர்களுக்கு மட்டும் உயர்தரக்கல்விகிடைப்பதுமே, இலட்சியமாக இருத்தல்வேண்டும். ஆனால் பெற்றோர்களின் பொருளாதார அந்தஸ்துக்குத் தக்கவாறு அவர்கள் ஆரம்பக்கல்வியோடு நிறுத்துவதும் உயர்தரக்கல்வி கற்பதும் இராமல் தகுதியுள்ள மாணவர் ஒவ்வொருவரும் தன்தகுதிக்கேற்றவாறு பெறுமாறு இருத்தல் வேண்டும். உயர்தரக்கலவிக்கு ஏற்படும் செலவை அதிகரிக்க வேண்டுமென்று சொல்லும் அபிப்பிராயத்தை நான் ஏற்கவில்லை. பெற்றோர்களிடம் பணமிருக்கிறது என்ற காரணத்தால் மட்டும் பிள்ளைகள் பலன் பெறுவார்கள் என்ற நோக்கமின்றி, உயர்தரக்கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஏழைமாணவன் அல்லது மாணவி ஏழ்மை காரணமாக உயர்தரக் கல்விகற்க முடியாமலிருக்கக்கூடாது. தகுதியற்றவர்களையும் மந்த புத்தியுடையவர்களையும் தவிர மற்றவர்களெல்லாரும் ஏறிப்போக உரிமையுடைய ராஜபாதையாக இருத்தல் வேண்டும். உலகிலுள்ள புத்தி சாதுரியத்தின் ஒருபகுதி அபிவிருத்தியடைய வழியின்றி இருக்கவிட்டுவிடத் தக்க அளவு அதிகமாக உலகில் புத்திசாலித்தனமிருக்கவில்லை; மேலும் புத்திசாலித்தனம் பெற்றோர்களின் சொத்துகளைச் சேர்ந்ததென்று சொல்ல முடியாது. ஒரு பணக்காரனுடைய மந்த புத்தியுடைய புத்திரன், அவன் சாதாரணமாகப் பெற முடியாத பட்டத்தைப் பெற முயற்சித்துத் தனது வாழ்நாளில் நல்ல பகுதியைப் பாழாக்காமல், அவன் சக்திக்கேற்ற ஒரு தொழிலில் புகுவதுதான் மேலாகும்.

ஒரு தேசத்தின் கல்வி முறை ஒரே படித்தாக இருப்பதால், அதை ஒழுங்குபட அமைப்பது மிக மிக முக்கியமான விஷயமாகும். நன்கு ஆராய்ச்சி செய்து திட்டப்படுத்திய அடிஸ்தானத்தின்மீது அதை அமைத்தால்தான் மிகச் மிகச் சிறந்த பலன்களைப் பெற முடியும். ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் சேரும் ஒவ்வொரு குழந்தையும் சர்வ கலாசாலையிலும் சேரும் என்ற நம்பிக்கையுடன் கீழ் வகுப்புப் படிப்பு எல்லாம் இந்த உயரிய ஸ்தானத்தை அடைவதற்குரிய படிகள்தான் எனத் தெரிந்தோ தெரியாமலோ கருதப்படுகிறது. ஆனால் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்களில் மிக அற்பமான பகுதியினரே சர்வ கலாசாலையில் சேருவதைக் காணும்பொழுது, மேற்குறித்த நம்பிக்கையின் பொய்ம்மை தெளிவாக விளங்குகிறது. வளர்ச்சியடையும் மனிதனுடைய அறிவு அபிவிருத்தியை நான்கு விரிவான படிகளாகப் பிரிக்கலாம். 1. குழந்தை (10 அல்லது 11 வயது வரை) 2. பையன் அல்லது பெண் (11 முதல் 14 அல்லது 15 வயதுவரை) 3. வாலிபம் (15 முதல் 17 அல்லது 18 வரை) வயது வந்தவர், 4. (18-க்கு மேல்) இந்த நான்கு வகை மூளை அபிவிருத்திக்கும் பொருத்தமாக நான்கு விதக் கல்வி அபிவிருத்தியையும் வகுக்கலாம்; அவை ஆரம்பம், நடுத்தரம், உயர்தரம், கல்லூரிப் படிப்பு. மேல் குறிப்பிட்ட வயதுக் கிரமமெல்லாம் உத்தேசமானாலும், அவற்றிற்குக் கூடுதல் குறைவாக ஒரு வயதுக்கு அதிகப்படக்கூடாது. இந்த நான்குவிதப் படிப்பு முறைக்குப் பொருத்தமாக நான்கு விதக் கல்வி ஸ்தாபனங்கள் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு படியும் முடியும்பொழுது அதற்குச் சான்றாகப் பரீட்சையோ, ஸர்டிபிகட்டோ இருத்தல் வேண்டும். ஆரம்

(2-ம் பக்கம் பார்க்க)

## துக்கவாரம்

14-ம் பக்கத் தொடர்ச்சி

சுடுசொல்லோ, நெடுநாட்களுக்கு, அமைச்சருக்கு அரண் அளிக்காது.

ஏன், ஆங்கிலம் போன்ற அன்னிய மொழி ஆசிரியர்களுக்குக் காட்டப்படும் அளவு மரியாதையும் நிலையும், தமிழாசிரியர்களுக்கு மறுக்கப் படுகிறது?

தமிழ் நாட்டில் தமிழாசிரியர்களை, ஆப்ரிக்காவிலே ஜெனரல் ஸ்மட்ஸ், 'இந்தியரை' வைத்திருக்கிற நிலையிலே, வைத்திருப்பது, அமைச்சருக்கோ அவருடைய தோழர்களுக்கோ, கீர்த்தியைத் தரக்கூடிய செயலா?

தமிழ்! தமிழ்! என்றுபோட்டுவந்த கூச்சல், போலிதானு!

எங்கள் ஆட்சியிலே தாய் மொழிக்கே ஆக்கமிருக்கும் என்று சொன்னதை மறந்தனரா?

ஆட்சியை, ஆங்கிலர் நடத்தினால் நம்மவரின அருமை பெருமைகளை அறிய முடியுமோ, குறைகளைத் தீர்க்க இயலுமோ என்று பேசின தெல்லாம், வெறும்பேச்சுத்தானு?

மந்திரிகள் தங்கள் சம்பள விஷயத்திலே அக்கரையுடன், நடந்து கொண்டு, சம்பளத்தை உயர்த்திக் கொண்டனரே, தமிழாசிரியர்களின் நிலையைக் கவனிக்க மறுப்பது, அறமாகுமா, அறிவுடைமையாகுமா?

உண்மையைக் கூறுகிறோம், தமிழாசிரியர்கள், துக்கவாரம் என்று பெயர் வைத்தனர். ஆனால் அவர்களின், அறிவு நிரம்பிய பேச்சுகளைக் கேட்ட பொதுமக்கள், "தமிழாசிரியர்களின் துக்கவாரம் என்று கூடக் கூறவேண்டாம்-இது வெட்கவாரம் இப்படிப்பட்ட ஆளவந்தார்களைப் பெற்றிருக்கிறோமே—இப்படிப்பட்டவர்களை ஏத்தி ஏத்தித் தொழுதோமே—இவர்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென்று இஷ்ட தேவதைகளை எல்லாம் வேண்டிக் கொண்டோமே—வந்தவர்களின் வல்லமை இப்படி இருக்கிறதே, என்று எண்ணி, ஓட்டு அளித்த நாங்கள் வெட்கப்படுகிறோம்-இது வெட்கவாரம்"—என்று பொது மக்கள் பேசுகின்றனர்.

துக்கவாரக் கூட்டங்களை முடித்துக்கொண்டு, சென்னையில், பல கட்சி ஆதரவாளர்களையும் கொண்டு, மாபெரும் கூட்டம் நடத்தி, நேரடி நடவடிக்கையில், தமிழாசிரியர்கள் இறங்க இருக்கிறார்கள்.

ஆளவந்தவர்கள், பாட்டாளிகளை, ஜெயிலில்போட்டாயிற்று-இனித்தமிழாசிரியர்களையும் சிறையில்தள்ளும், சிலாக்கியமான - கீர்த்தி மிக்க-தலைமுறை தலைமுறைக்கும் புகழ் தேடித் தரத்தக்க- கைங்கரியத்தையும் செய்யட்டும்.

பொது மக்களிடம், ஆசைமொழி கூறவும், அவர்கள் எதிர்த்துக் கேட்டால் அடக்கவும், முறையே பிரசார பலமும், அடக்குமுறைக் கருவிகளும், நம்மிடம் இருக்கும்போது, நமக்குப் பயமென்ன, என்றுஅமைச்சர்எண்ணுகிறார்போலும். தமிழாசிரியர்கள், கடைசி நிமிஷத்தில் பின் வாங்கிவிடுவர் என்று நினைக்கிறார் போலும்.

அமைச்சர், பெரிய ஏமாற்றத்துக்குள்ளாகப் போகிறார். தமிழாசிரியர்களின் உள்ளம் கொதிப்பேறி இருக்கிறது—பொதுமக்கள் – குறிப்பாக மாணவர்கள் — பெற்றோர்கள்—அவர்களை ஆதரிக்கத் துணிந்துவிட்டனர். தமிழாசிரியர்களின் 'துக்கவாரம்' இந்த வகையிலே, நல்லபலனளித்து விட்டது.

பொதுமக்கள், நன்கு அறிவார்கள், இவர்கள், எதிர்க்கட்சிக்காரரல்ல, பதவிக்காகப்போரிடுபவரல்ல, காங்கிரஸ் எது செய்தாலும் எதிர்க்கும் போக்குகொண்டவர்களல்ல—அரசியலுக்குப் புறம்பானவர்கள்; ஆட்சியாளர்களிடம் வீண் வம்புக்கு வருபவர்களல்ல, என்பதை. இப்படிப்பட்டவர்கள், துக்கவாரம் நடத்த வேண்டிய அளவுக்கு நிலைமை இருப்பது, பொதுமக்கள் மனதிலே, புதியதோர் அதிர்ச்சியைத்தந்து, விழிப்பையும் உண்டாக்கிவிட்டது. ஆளவந்தார்களின் போக்குச் சரியல்ல, என்று பொதுமக்கள் தீர்ப்பளித்துள்ளனர்—ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும்.

ஆண்மையுடன் நடக்க விருப்பமிருந்தால், அமைச்சர், பொதுமக்களிடம், தமது கட்சியை எடுத்துக் கூறட்டும், அதே கூட்டத்திலே ஒரு தமிழாசிரியர், தமதுகட்சியையும்எடுத்துப் பேசட்டும் — பொதுமக்கள் தீர்ப்பளிக்கட்டும்—பார்ப்போம்.

அமைச்சர், இந்த அறைகூவலை ஏற்றுக்கொள்வாரா?

✲

## வைத்தியசாலை

19—11—47 முதல் கீழ்க்கண்ட இடத்தில் கைதேர்ந்த மருந்துகளுடன் ஒரு வைத்தியசாலை திறக்கப் பட்டிருக்கிற தென்பதைப் பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr: K. பார்த்தசாரதி
காப்டன்; D. M. S.
101, திருக்கச்சி நம்பிதெரு
காஞ்சிபுரம்

## அறிவிப்பு

திருவண்ணாமலையில் "திராவிட நாடு" கிடைக்குமிடம்:—

1. ஆறுமுகம் பாங்க் கடை
தேர்முட்டித் தெரு
2. பாபுலர் சோடாக் கடை
பெரிய கடை வீதி

திராவிடர்களுக்கோர் நற்செய்தி!
ஈடற்ற திராவிடர்தம் உரிமையை நிலைநாட்ட இணையற்ற
புரட்சிக் கருத்துக்களை ஊட்டும எழுத்தோவியங்களாம்:-
கனவில் கண்ட கவி விலை அணா. 10.
நாம் யார்? .... ,, ,, 8.
ஐக்கிய திராவிடம்.. ,, ,, 12.
[வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.]
விபரங்களுக்கு:- திராவிட கலா நிலையம்.
55, முக்தாருனிஸா பேகம் தெரு, மவுண்ட் ரோடு P.O. சென்னை.

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press,
817—819 Hodgsonpet Conjeeveram.